மங்கள வைபவங்களுக்கு
தேவையான
பட்டுப் புடைவைகள்
மற்றும்
சிறுவர்களுக்கான
தெரிவுகளுக்கு
சோபனா
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

இன்றைய அறிமுகம்!
நாளைய நாகரீகம்!
ஆதிக்க ஆடைகளில்
சோபிக்க சோபனா
சோபனா
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 05 வியாழக்கிழமை (19 – 01 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 53

# தீர்வுக்கான அரசின் முயற்சிகள் குறித்து
# வெளிநாட்டுத் தூதர்களுக்கு விளக்கம்!

## கைதிகளுக்கு விடுதலை

கொழும்பு ஜன. 19

பாப்பரசரின் இலங்கை விஜயத்தை ஒட்டி நாட்டின் பல்வேறு சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளுக்கு மன்னிப்பு வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக நீதி அமைச்சின் செயலாளர் தாரா விஜய திலக்க தெவித்துள்ளார்.

பாப்பரசர் நாளை கட்டுநாயக்கா வந்து சேர்ந்ததும், இவர்கள் மன்னிப்பு அளித்து விடுதலை செய்யப்படுவர். (உ-3)

பாப்பரசர் இலங்கை விஜயம்:

## தனக்குத் தானே தீமூட்டி எரிப்பதாக பிக்கு மிரட்டல்!

யாழ்ப்பாணம், ஜன. 19

பௌத்த மதம் தொடர்பாக தவறாக எழுதியதை தனது நூலில் இருந்து நீக்காது பாப்பரசர் இலங்கைக்கு வருகை தந்தால்—

தீமூட்டி தன்னைத்தானே எரிக்கப்போவதாக றத்தொலிய புஷ்பாராம விகாரையின் பிரதம பிக்கு அறிவித்துள்ளார்.

இவ்விகாரையில் இருந்த புத்தர் சிலை முன்னர் கிறிஸ்தவ மதத்தவரால் தீயிடப்பட்டதாக கூறிய அந்தப்பிக்கு அதுபோன்று தானும் தனக்குத் தீமூட்டிக் கொள்ளப் போவதாக எச்சரித்திருக்கிறார் (உ-3)

## புனர்நிர்மாணத்துக்கு உதவும் படியும் கோருகின்றார் லக்ஷ்மன் கதிர்காமர்

கொழும்பு, ஜனவரி 19

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசு எடுத்து வரும் முன்முயற்சிகள் குறித்து, கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதர்களை அழைத்து அவர்களுக்கு விளக்கமளித்தார் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்.

யுத்தத்தால் பாதிப்புற்ற பகுதிகளில் புனர்நிர்மாண, புனர் வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தத்தமது நாட்டு அரசுகளிடமிருந்து தாராளமாக நிதி உதவியைப் பெற்றுத் தருமாறும் வெளிநாட்டுத் தூதர்களை அவர் கேட்டுக் கொண்டார்.

கொழும்பில் உள்ள சகல வெளிநாட்டு தூதர்களையும் நேற்று முன்தினம் தமது அமைச்சு அலுவலகத்துக்கு அழைத்த அமைச்சர் கதிர்காமர் அவர்களுடன் கலந்துரையாடினார்.

வடக்கு - கிழக்கின் தற்போதைய நிலைமை, மோதல் தவிர்ப்பு உடன்பாடு இடையூறின்றி நடைமுறைப்படுத்தப்படுவது, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முன்முயற்சிகள் ஆகியவை குறித்து அமைச்சர் விளக்கமளித்தார்.

வடபகுதிக் கடலில் மீன் பிடிக்க அனுமதியளிப்பது பற்றிய விடயம் தற்போது பரிசீலனையில் உள்ள ஒரு முக்கிய அம்சமாகும்.

மீனவர்கள் கடலுக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வாரத்தில் ஆறு நாட்கள் இனி படகுச் சேவை!

### 4 நாட்கள் காலையும் மாலையும்

யாழ்ப்பாணம், ஜன. 19

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று முதல் ஞாயிறு தவிர — வாரத்தில் 6 நாட்கள் — நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

செவ்வாய், புதன், வெள்ளி, சனி ஆகிய நாட்களில் காலையில் 8 மணி முதல் காலை 10 மணி வரையும்—

பின்னர் பிற்பகலில் மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையும் — படகுச்சேவை நடைபெறும்—

திங்கள், வியாழன் ஆகிய நாட்களில் காலை 8மணி முதல் காலை 10 மணி வரை மட்டுமே நடைபெறும்.

## குடா நாட்டில் நேற்று காற்றுடன் பலத்த மழை!

### வயல்கள் வெள்ளக் காடாகின!

யாழ்ப்பாணம், ஜன. 19

குடாநாட்டில் நேற்று முன்தினம் இரவுமுதல்தொடர்ந்து பெய்து வரும் பெருமழையால் தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. பல இடங்களில் நெல் வயல்கள் வெள்ளக் காடாக காட்சி அளிக்கின்றன.

பலத்த காற்றுடன் மழை தொடர்ந்து பெய்து கொண்டிருப்பதால் குடாநாட்டில் இயல்பு நிலை நேற்று பாதிக்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## பாப்பரசர் திருவுருவ படம் இலவசம்

புனித பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு —

நாளைய உதயனுடன் பாப்பரசரின் நான்கு வர்ண அழகிய திருவுருவப் படம் இலவசமாக வழங்கப்படும்.

இன்றே உங்கள் உதயன் விநியோக முகவரிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்.

# இம்மாத இறுதியில் 4ஆம் கட்டப்பேச்சு?

யாழ்ப்பாணம், ஜன. 19

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான 4 ஆம் கட்ட பேச்சுக்கள் இம்மாதத்தின் பிற்பகுதியில் அல்லது அடுத்த மாத முற்பகுதியில் ஆரம்பமாகும் என்று 'டெய்லி நியூஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

நான்காம் கட்டப் பேச்சுக்களில் முக்கியமான மூன்று விடயங்கள் இடம்பெறும் எனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாண குடா நாட்டுக்கான தரை வழிப் பாதையை திறத்தல், பொருளாதாரத் தடை நீக்கம், அரசியல் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான திகதியை நிர்ணயித்தல் ஆகியனவே அம்மூன்று விடயங்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மூன்றாம் கட்டப் பேச்சுக்களில் முக்கியமான இந்த மூன்று விடயங்களும் தீர்வு காணப்படாமல் எஞ்சியிருந்தன.

ஆறு மணித்தியாலங்கள் இடம்பெற்ற மூன்றாம் கட்டப் பேச்சுக்களில் போர் இடை நிறுத்தத்தை கால வரையறையின்றி நீடித்தல், போர் இடை நிறுத்த காலத்தில் ஆயுத நடவடிக்கைகளை முடக்கி வைப்பதற்கான இணக்கம், போரினால் அழிந்துள்ள பிரதேசங்களில் புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றில் முன்னேற்றம் காணப்பட்டது என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது. (உ-3)

# வடக்குப் புனரமைப்புக்கு தனியான அதிகார சபை

### அரச தரப்பில் உறுப்பினர்கள் நியமனம்

கொழும்பு, ஜன. 19

வடபகுதியை புனரமைப்புச் செய்வதற்கு அதிகார சபை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

வடபகுதியை புனரமைப்புச் செய்வதற்கு உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்காக அதிகாரசபை ஒன்றை அமைக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்த ஆலோசனையை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்த அதிகார சபையில் இடம்பெறும் அரச தரப்பு உறுப்பினர்களின் விவரங்களை அரசு வெளியிட்டுள்ளது.

அமைச்சர்களான தர்மசிறி சேனநாயக்கா, எம். எச். எம். அஷ்ரப், மற்றும் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா ஆகியோர் உட்பட ஐவர் அரசினால் நியமிக்கப்பட்டுள்ளனர் அதிகார சபையில் இடம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# கடற் கொந்தளிப்பில் சிக்குண்ட 8 மீனவர்களைக் காணவில்லை!

## வடமராட்சியில் அவலம்

வடமராட்சி, ஜன. 19

பருத்தித்துறை கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் சுமார் எட்டுப்பேர் கடும் காற்று மழையினால் காணாமல்போய்விட்டார்கள்

காற்றினால் படகுகள் கவிழ்ந்ததில் கடலுக்குள் வீசப்பட்ட மற்றொரு தொகுதி மீனவர்கள் பெரும் அலைகளுக்கு மத்தியில் நீந்திச் கரைசேர்ந்தனர்.

வடமராட்சி செய்தியாளர்:— எஸ். தில்லைநாதன்

நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் வல்வெட்டித்துறை தொடக்கம் பருத்தித்துறை உள்ளிட்ட கற்கோவளம் வரையிலான பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் சுமார் முப்பதுக்கு மேற்பட்ட படகுகளில் மீன் பிடிக்கச் சென்றனர்.

இவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இரவு நேரம் மழையுடன் கடும் காற்று வீசத் தொடங்கியது. கடலும் கடும் கொந்தளிப்புக்குள்ளானது.

இதனால் மீன்பிடிப் படகுகள் அலைகளில் அடிபட்டு நாலாபுறமும் பிரிந்து சென்றன.

அவற்றில் சில நேற்று அதிகாலைவேளை மீனவர்களுடன் கரை சேர்ந்தன.

சில படகுகள் குப்புற கவிழ்ந்ததுடன் அவற்றிலிருந்த வலைகளும் அள்ளுப்பட்டுச் சென்றன. அவற்றில் இருந்த மீனவர்கள் நீந்திக் கரை சேர்ந்தனர். அவ்வாறு நீந்திக்கரை சேர முயன்ற

(6ஆம் பக்கம் பார்க்க)

# பிரதேச சுயாட்சியை உறுதி செய்யும் கூட்டாட்சியை பரிசீலிக்கத் தயார்!

### பாலசிங்கம் கூறியதாக "டெய்லி நியூஸ்" தகவல்

கொழும்பு, ஜன. 19

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சமஷ்டி முறை பெரிதும் விரும்பத்தக்கது. எமது மக்களுக்கு பிரதேச சுயாட்சியை உறுதிப் படுத்தும் ஓர் கூட்டாட்சி முறையை பரிசீலனை செய்வதற்கு நாம் தயார் — என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் வெளிநாட்டு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாக ஏ. எவ். பி. செய்தி நிறுவனத்தை மேற்கோள்காட்டி 'டெய்லி நியூஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது,

அதிகாரப் பரவலாக்கல் குறித்து ஜனாதிபதி சந்திரிகா வெளியிட்டுள்ள கருத்துக்கு விடுதலைப் புலிகளிடமிருந்து கிடைத்துள்ள முதலாவது பதில் இது என்று ஏ எவ்.பி. செய்தியாளர் குறிப்பிட்டார்.

ஆட்சிக்கு வந்து நான்கு மாதங்களையே பூர்த்தி செய்திருக்கும் ஜனாதிபதியின் அரசாங்கத்துடன் அரசியல் பேச்சுக்களை நடத்துவதற்கு புலிகள் தயங்குகிறார்கள் என்று வெளியான அறிக்கைக்கு பாலசிங்கம் மறுப்பு தெரிவித்துள்

(6ஆம் பக்கம் பார்க்க)

### அலரி மாளிகையில் சிக்கியது

## மீனவருக்கு வழங்குவதற்கு எடுத்து வந்த குண்டாம்!

கொழும்பு,ஜன.19

அலரி மாளிகையில் 15கிலோ வெடிமருந்து கண்டுபிடிக்கப் பட்டதாக இந்தியப்பத்திரிகையில் வெளியான செய்தி தவறானது என்று ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வெள்ளவாயாவில் கொமாண்டோ பயிற்சி பெற்ற பின்னர் கொழும்புக்கு திரும்பிய இராணுவச் சிப்பாய் ஒருவர் 300 கிராம் இரசாயனப் பொருள் ஒன்றை வைத்திருந்தமையே கண்டுபிடிக்கப் பட்டது.

இந்த இராணுவச் சிப்பாய் வெடி வைத்து மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு விற்கும் நோக்கத்துடன் தாம் பயிற்சி பெற்ற முகாமில்இருந்துஇந்த இரசாயனப் பெருளைக் களவாடிக் கொண்டு வந்துள்ளார் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினர் இவரை தொடர்ந்து விசாரணை செய்துவருகின்றனர் — இவ்வாறு அப்பிரிவின் பணிப்பாளர் நிஹால்கருணாரத்ன தெரிவித்தார்.

(மற்றும் செய்திகள் 5ஆம் பக்கத்தில்)

புதுக்கடை திறப்பு விழா

அன்புடையீர்!

நிகழும் பவ வருடம் தைத்திங்கள் 5 ஆம் நாள் இன்று (19-01-1995) வியாழக்கிழமை முற்பகல் 10-04 முதல் 11-15 வரையுள்ள சுப முகூர்த்த வேளையில் எமது ஸ்தாபனம் கோலாகலமாக திறந்து வைக்கப்படும்.

எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கலைமகள் வர்த்தக நிலையம்
(பல்பொருள் மொத்த சில்லறை வியாபாரம்)

கலைமகள் வர்த்தக நிலையம்
286, கேணல் இட்டுசாலை,
(மருத்துவமனை வீதி)
யாழ்ப்பாணம். (8204)

### உலக வங்கியின் நெருக்குதலால் அரசுக்கு நெருக்கடி

# தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாதநிலை!

கொழும்பு, ஜன. 19

பொதுத் தேர்தலின் போது மக்களுக்குக் கொடுத்த — பொருளாதாரத் துறை சம்பந்தப்பட்ட— பல்வேறு வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு புதிய அரசு முயற்சிக்கின்ற போதிலும் —

ஸ்ரீலங்காவுக்கு கடன் மற்றும் நிதி உதவிகளை வழங்கி வரும் உலக வங்கியின் நெருக்குதல் காரணமாக அவற்றை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதனால் —

மக்களுக்கு பொருளாதார உதவிகள் மற்றும் நிவாரண விநியோகங்களை மேற்கொள்ள புதிய அரசு எடுத்த முடிவு செயற்படுத்த முடியாத நிலையில் இருக்கின்றது.

★ வேலையற்ற இளைஞர்கள் யுவதிகளுக்கு மாதாந்தம் ஆயிரத்து 500 ரூபா வழங்குதல்.

★ கல்வி, சுகாதாரத் துறைகளைச் சேர்ந்தோருக்கு வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக [illegible]

(2 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தர் சிலையில் அமர்ந்த சம்பவம்

# பி.பி.ஸி கொழும்பு நிருபர் ஜோர்ஜ் ஆர்னியே கைது!

## பின்னர் பிணையில் விடுதலை

கொழும்பு, ஜன. 19

அனுமதியின்றி புத்தரின் சிலையில் அமர்ந்திருந்து படமெடுத்த சம்பவம் தொடர்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டிருந்த பி. பி. ஸியின் கொழும்பு செய்தியாளர் ஜோர்ச் ஆர்னி நேற்று முன் தினம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

திக்வல்ல திமணராம விகாரையில் உள்ள புத்தர் சிலையில் அமர்ந்திருந்து படம் எடுத்தாக ஜோர்ஜ் ஆர்னியும் மற்றொரு பி. பி. ஸி படப்பிடிப்பாளரும், அவரது வழிகாட்டியான உதவியாளர் ஒருவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்

நீதிமன்றத்தில் இவர்கள் ஆஜர் செய்யப்பட்ட போது பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

பி. பி. ஸி யின், வீடியோ படமான ''வத்தனா'' வுக்கு கிராமப்புறப்பகுதியில் படம் எடுக்க தாம் தமது குழுவினருடன் சென்றதாக ஜோர்ஜ் ஆர்னி தெரிவித்தார். (ஐ-3)

# மந்திகை ஆஸ்பத்திரிக்கு எக்ஸ்-றே இயந்திரம்

மந்திகையில் இயங்கும் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு புதிய எக்ஸ்—றே இயந்திரம் ஒன்று கிடைக்கவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச வைத்தியசாலைகளுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் அன்பளிப்பாக வழங்கிய வைத்திய உபகரணங்கள், வைத்திய கருவிகள் ஆகியவற்றில் இதுவும் ஒன்றாகும்.

கடந்த வாரம் ''றுகுணு'' கப்பலில் இந்த வைத்திய உபகரணங்களில் மற்றுமொரு தொகுதி இங்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

யாழ். சுகாதார திணைக்கள களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ள இந்த எக்ஸ்—றே இயந்திரம் விரைவில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக அறியப்படுகின்றது. (இ-135)

# மாவில் வெள்ள வாய்க்கால் புனரமைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன.19

வடமராட்சி பகுதியில் உள்ள உபய கதிர்காமம் கோயில் முன்பாக உள்ள மாவில் வெள்ள வாய்க்கால் கிராமிய உற்பத்திக் குழு மூலமாக புனரமைக்கப்பட்டுள்ளது.

புட்டளைப் பிள்ளையார் கோயில் பகுதியிலுள்ள 200 ஏக்கர் வயலிலிருந்து ஆரம்பமாகும் இவ்வாய்க்கால், உபய கதிர்காமம் கோயில் முன்பாகச் சென்று வல்லிபுரக் குறிச்சியுடன் இணைகிறது.

1992 ஆம் ஆண்டில் உபய கதிர்காமம் கோயில், நிர்வாகத்தினரால் உருவாக்கப்பட்ட இவ் வெள்ள வாய்க்கால் சில இடங்களில் மூன்று அடி ஆழமும், சில இடங்களில் நான்கு அடிஆழமும்கொண்டதாகவும், மூன்று அடி அகலமானதாகவும் இருந்தது.

தற்போது, 4 அடி ஆழமாகவும், 8 அடி அகலமாகவும், 300 அடி நீளமாகவும் வெட்டப்பட்டுள்ளது. இதனால் 25 க்கு மேற்பட்ட விவசாயிகள் நன்மையடைவதுடன் 200 ஏக்கர் வயல் நிலம், வெள்ள அழிவிலிருந்து பாதுகாக்கப்படும்

இதன் மூலம் சுமார் 15 ஆயிரம் ரூபாவிக்கும் அதிகமான வேலை சிரமதான மூலம் செய்யப்பட்டுள்ளது என்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தெரிவிக்கிறது. (இ)

## தமிழ்ப்பிரிவு

கொழும்பு, ஜன. 19

மேல்மாகாண சபைப் பணிமனையில் சகல அதிகாரமும் கொண்ட தமிழ்ப்பிரிவு ஒன்று விரைவில் அமைக்கப்படும் என்று மேல்மாகாண சபை முதலமைச்சர் மொறிஸ் ராஜபக்ஸ தெரிவித்துள்ளார். (க-ஐ)

## அன்பளிப்பு

மானிப்பாய், ஜனவரி. 19

சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம், மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை, மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை, நவாலி சென்ற்பீற்றர் றோமன் கத்தோலிக்க பாடசாலை ஆகியவற்றிற்கு தலா ரூபா பத்தாயிரம் பெறுமதியான ஆரம்ப வகுப்புகளுக்கான கணித பாட உபகரணப் பொதிகளை வலயம் இரண்டு கல்விப்பணிப்பாளர் அண்மையில் அன்பளிப்புச் செய்துள்ளார். (க-90)

**ADVERTISEMENT**

**SERVICE OF AN ENGINEER**

Applications are Invited from Suitably Qualified Engineers for Training in Germany [1 month] for Installation and maintenance of X' Ray Equipment provided under German Aid.

The applicants should hand over their applications personally before 9 a.m. on 23-01-95 at the office.

**The Secretary,**
Jaffna General Hospital,
Development Association.

(C-194)

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**

**அமரர் இராமலிங்கம் பெரியதம்பி**
(முன்னாள் விற்பனைத் திணைக்கள காசாளர்)

அன்பின் திருவுருவாய். பாசத்தின் இருப்பிடமாய் எங்கள் குடும்பத்தின் நாயகனாய், எம்மையெல்லாம் வழி நடத்தி எங்கள் ஒளி விளக்காய்த் திகழ்ந்த குல தெய்வமே! ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி விட்டு, இறைபதம் அடைந்த உங்கள் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கதிர்வேலாயுத சுவாமியைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (19-01-95) எமது இல்லத்தில் இடம் பெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

பெ. விகவநாதன்
அல்லி மாளிகை,
சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

(34799)

# பாதுகாப்புத்துறை இராஜதந்திரி புதுடில்லி தூதரகத்துக்கு அவசியம்!

## புதிய இலங்கைத் தூதுவர் மங்கள முனசிங்க கோரிக்கை

கொழும்பு, ஜன. 19

புதுடில்லியில் உள்ள ஸ்ரீலங்கா தூதரகத்திற்கு பாதுகாப்புத்துறை இராஜதந்திரி ஒருவரை நியமிக்க வேண்டும் என புதுடில்லிக்கான ஸ்ரீலங்கா தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கும் மங்கள முனசிங்க கோரியிருக்கிறார்.

புதுடில்லியில் உள்ள ஸ்ரீலங்கா தூதரகத்துக்கு பாதுகாப்புத்துறை இராஜதந்திரி ஒருவரை நியமிப்பது அவசியமானது என்றார் அவர்.

புதுடில்லிக்கான முன்னாள் தூதுவர் நெவில் கனகரத்தினாவும் இத்தகைய கோரிக்கையை விடுத்திருந்தார்.

நியூயோர்க்கிற்கு அடுத்ததாக அதிகளவு தூதரகங்களை புதுடில்லி கொண்டுள்ளது.

பர்மா போன்ற நாடுகள் கூட புதுடில்லியில் பாதுகாப்புத்துறை இராஜதந்திரியைக் கொண்டுள்ள போதிலும், இந்தியாவுடன் பல்வேறு தொடர்புகளைக் கொண்டுள்ள ஸ்ரீலங்கா அதுகுறித்து சிந்தித்துப் பார்க்காமல் இருக்கின்றது என்றார் அவர்.

ஸ்ரீலங்கா படை அதிகாரிகள் இந்தியாவில் பயிற்சி பெறுவதற்காக அடிக்கடி புதுடில்லி வருகின்றார்கள். இத்தகையோருக்கு உதவுவதற்காகவும் புதுடில்லித் தூதரகத்தில் பாதுகாப்புத்துறை இராஜதந்திரி தேவைப்படுகின்றார்.

பாதுகாப்புத்துறை இராஜதந்திரிக்கு மேலதிகமாக வர்த்தகத்துறை விஸ்தரிப்பு விவகாரங்களைக் கவனிக்க வர்த்தகத்துறை ராஜதந்திரி ஒருவரும் நியமிக்கப்பட வேண்டும் என அவர் கோரியுள்ளார். [உ]

வடக்கில் போர் நிறுத்தத்தை கண்காணிக்க

# கனடா, நெதர்லாந்து பிரதிநிதிகள் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தனர்

கொழும்பு, ஜன. 19

விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையே அமுலில் உள்ள போர் இடை நிறுத்தத்தை கண்காணிப்பதற்காக கனடா மற்றும் நெதர்லாந்து நாட்டு பிரதிநிதிகள் இருவர் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தனர்.

வடக்கில் போர் இடை நிறுத்தத்தை கண்காணிக்கும் இரு குழுக்களுக்கும் இவர்கள் இருவரும் தலைமை வகிப்பர்.

கொழும்பு வந்துள்ள இரு பிரதிநிதிகளில் ஒருவரான ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி லெப்டினன்ட் கேணல் போல் ஹென்றி கோஸ்டிஸ்கே யாழ்ப்பாணம் — மன்னார் பிராந்திய கண்காணிப்பு குழுவுக்கு தலைமை வகிப்பார்.

இவர் மத்தியகிழக்கு, அஸ்கோலா, பொஸ்னியா ஆகிய இடங்களில் முன்னர் அமைதி காக்கும் பணியில் ஈடுபட்டவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இன்னமும் ஓரிருதினங்களில் இவர் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

முல்லைத்தீவு — வவுனியா பிராந்தியத்துக்கான கண்காணிப்பு குழுவுக்கு கனடாவைச் சேர்ந்த ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் கினைவ் மில்லர்றோ தலைமை வகிக்கவுள்ளார். இவர் சைப்பிரஸிலும், மத்தியகிழக்கிலும் ஐ. நா அமைதிகாக்கும் பணியில் அனுபவம் பெற்றவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## அரச அதிபர் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஜன.19

யாழ். மாவட்ட நிலைமை குறித்து கொழும்பில் நடைபெறும் மாநாடுகளில் பங்குபற்ற யாழ் அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம்நேற்று இங்கிருந்து கொழும்பு பயணமானார். (ஐ)

## அரசாங்க வங்கி விடுமுறை

கொழும்பு, ஜன. 19

பாப்பரசரின் இலங்கை விஜயம் காரணமாக நாளை 20 ஆம் திகதிஅரசாங்க வங்கி விடுமுறைபாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. (க-4)

## தேசிய கல்வி நிறுவக மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் தேசிய கல்வி நிறுவக பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறியில் பயிலும் இரண்டாம் வருட மாணவர்களை எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிறன்று அங்கு சமூகமளிக்குமாறு சிரேஷ்ட விரிவுரையாளர் அறிவித்துள்ளார்.

மறுநாள் திங்களன்று ஆரம்பமாகவுள்ள கற்பித்தல் பயிற்சி தொடர்பான அறிவுறுத்தல்களும் ஆவணங்கள் மற்றும் சிறப்புக் கற்பித்தல் மொடியூல்ஸ்கள் என்பன அன்று வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 19

பருத்தித்துறையில் இன்று நடைபெறவிருந்த வீரவணக்க கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் சாவகச்சேரி வட்டத்தில் நடைபெறவிருந்த கூட்டமும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## பாடசாலைக்கு தண்ணீர்க் குழாய்கள்

வடமராட்சி, ஜன. 19

மாணவர்களின் வசதிகருதி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் தண்ணீர்க்குழாய்கள் புதிதாக பொருத்தப்படவுள்ளன.

சுமார் 25 ஆயிரம் ரூபாய் செலவில் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இத்தண்ணீர்க் குழாய்கள் பொருத்தப்படவுள்ளன. [க-173]

## மலசலகூடம் சேதம்

குருநகர், ஜன. 19

பொது மலசல கூடம் சேதமாக்கப்பட்டதையடுத்து அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது.

யாழ். மடம் வீதி தேவரிக்குளத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள பொதுமலசல கூடமே சேதமாக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-51)

தாண்டிக் குளம் ஊடாக

# இன்று பயணம் செய்வதை தவிர்க்க வேண்டுகோள்

கொழும்பு, ஜன. 19

வழமையான, சாதாரண தேவைகளுக்காக தாண்டிக்குளம் ஊடாக இன்று பயணம் செய்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு பாதுகாப்புப் படையினர் பொதுமக்களைக் கேட்டுள்ளனர்.

அதேபோன்று 21ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 23ஆம் திகதி திங்கட்கிழமை வரையும் தாண்டிக்குளம் ஊடான பயணத்தைத் தவிர்க்குமாறும் அவர்கள் கேட்டுள்ளனர்.

பாப்பரசரின் வியஜத்தை ஒட்டி, அவரைத் தரிசிப்பதற்காகச் செல்லும் யாத்திரிகர்கள் மேற்படி தினங்களில் பயணம் செய்வதால், தாமதங்கள் ஏற்படும் என்பதாலேயே பாதுகாப்புப் படையினர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

கொழும்பு செல்வதற்காக இன்றும், அங்கிருந்து திரும்பி வருவதற்காக 21 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரையும் பெரும் எண்ணிக்கையான யாத்திரிகர்கள் தாண்டிக்குளம் ஊடாகப் பயணம் செய்வர்.

அங்கு வழமையான சோதனைகள் நடைபெறும் என்பதால் பயணத்தில் தாமதம் ஏற்படும்.

ஆகையால் குறிப்பிட்ட தினங்களில் மிக அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே ஏனையோர் பயணம் செய்து ஒத்துழைக்குமாறு பாதுகாப்புப் படையினர் கேட்டுள்ளனர். [அ-3]

திருகோணமலையில்

# கண்காணிப்புக் குழுவின் பணிமனை ஹோட்டலில்!

யாழ்ப்பாணம், ஜன. 19

திருகோணமலை மாவட்ட கண்காணிப்பு குழு அலஸ் தோட்டத்தில் உள்ள'ஹோட்டல் கிளப் ஓஸானிக்கில் தங்கியிருந்து செயற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்குழுவுக்கு நோர்வே பிரதிநிதி அலம் ஹோம் தலைமை வகிக்கிறார்.

இளைப்பாறிய மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.ஆர்.எம். பெரேரா, கலாநிதி எம்.எம். மூசின் ஆகியோர் அரசதரப்புப் பிரதிநிதிகளாக இதில் அங்கம் வகிக்கின்றனர்.

பாப்பரசரின் விஜயத்தை கௌரவித்து

# மரியன்னை பேராலயத்தில் நாளை முத்திரை வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன.19

பரிசுத்த பாப்பரசரின் இலங்கை விஜயத்தை ஒட்டி நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் முத்திரையும் முதல் நாள் தபால் உறையும் வெளியிடப்பட உள்ளன.

யாழ். மரியன்னை பேராலய வளாகத்தில் பிற்பகல் 4-30 மணிக்கு வெளியீட்டு வைபவம் இடம்பெறும்.

யாழ் மறைவட்ட குரு முதல்வர் அருட்திரு எஸ். ஜே. இமானுவல் அதற்குத் தலைமை வகிப்பார்.

வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் திரு. எஸ். எம். சேதுகாவலர் முத்திரையையும், முதல் நாள் உறையையும் வெளியிட்டு வைப்பார்.

யாழ். மறைவட்ட முன்னாள் ஆயர் அதி. வண. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவற்றைப் பெற்றுக்கொள்வார்.

அன்றைய தினம் கொழும்பிலும் இம் முத்திரை வெளியீடு இடம் பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ-4-173)

# 65 சதவீத குழந்தைகள் போஷாக்குக் குறைவு

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த 1994 ஆம் ஆண்டு மட்டும் 6,500 குழந்தைகள் பிறந்துள்ளன.

இக்குழந்தைகளில் [65 சதவீதமான குழந்]தைகள் போஷாக்கு குறைந்து காணப்பட்டதாக புள்ளிவிவரத்தில் இருந்து தெரியவந்தது. (க-17)

# ஜப்பான் பூகம்பத்தில் 3,000 பேர் உயிரிழப்பு

புதுடில்லி, ஜன. 19

ஜப்பானில் செவ்வாயன்று ஏற்பட்ட பெரும் பூகம்பத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 500 ஆக அதிகரித்துள்ளது.

ஆயிரம் பேரைக் காணவில்லை, 13 ஆயிரம் பேர் காயமடைந்துள்ளனர் ஒரு லட்சத்து 50ஆயிரம் பேர் வீடுகளை இழந்துள்ளனர்.

மீட்புப்பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடவுச்சீட்டு மோசடி தொடர்பாக

# ஆறு இலங்கையர்கள் நேபாளத்தில் கைது!

காத்மண்டு, ஜன. 19

சட்டவிரோதமாகக் கடவுச்சீட்டுக்களைத் தயாரித்து வந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் ஆறு இலங்கையர்களை தாம் கைது செய்துள்ளதாக நேபாள நாட்டின் குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காத்மண்டுவில் உள்ள வீடு ஒன்றை முற்றுகையிட்ட அதிகாரிகள் இவர்கள் ஆறு பேரையும் கைது செய்தனர்.

கடவுச் சீட்டுகளை அச்சிடும் இயந்திரங்களையும், இருபது கடவுச் சீட்டுக்களையும் அதிகாரிகள் அங்கிருந்து கைப்பற்றியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

## யானை தாக்கி நால்வர் மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 19

திருகோணமலை மூதூரில் காட்டுப்பகுதிக்கு தேன் எடுக்கச்சென்ற எட்டுப்பேரை யானை ஒன்று தாக்கியுள்ளது.

அதில் நான்கு பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர் என்றும்—

ஏனைய நான்கு பேரும் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## வன்னியிலும் மழை!

யாழ்ப்பாணம், ஜன. 19

கிளிநொச்சி, வவுனியா பகுதிகளில் நேற்று முன்தினம் கடும்மழை பெய்துள்ளது.

குளங்களில் நீர் மட்டம் குறிப்பிடக் கூடிய அளவு அதிகரித்து இருந்தது. சில இடங்களில் மழை வெள்ளம் ஏற்பட்டதால்போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது. (உ-3)

## குடாநாட்டில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

கப்பட்டது.

பலத்த காற்றினால் சில இடங்களில் மரங்கள் விழுந்துள்ளன. வாழைத் தோட்டங்களில் வாழை மரங்கள் சாய்க்கப்பட்டுள்ளன,

நெல் அறுவடைக்கு தயாராகி வரும்வேளையில் பெரும் மழை பெய்திருப்பது நெற் செய்கைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ-155)

## இன்று பாதுகாப்பு ஒத்திகை

கொழும்பு, ஜன. 19

பாப்பரசரின் விஜயத்தை ஒட்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் நேற்று முதல் அமுலுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக இன்று கொழும்பில் நடக்கவிருக்கும் ஒத்திகையில் 15 ஆயிரம் பொலீஸார் பங்குபற்றுகின்றனர். (உ-3)

# தேர்தல் வாக்குறுதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய அரசின் முக்கிய திட்டங்களும் செயற்படுத்த முடியாத நிலையில் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

அரசின் செலவினங்களை அனுமதிப்பதற்கும் அரசு தொடர்ந்து செயற்படத் தேவையான கடனுதவிகளை வழங்குவதற்கும் உலக வங்கி பல்வேறு நிபந்தனைகளை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலகவங்கி விதித்துள்ள நிபந்தனைப் பிரகாரம் விரைவில் அரச வங்கிகளை தனியார் மயப்படுத்த திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மக்கள் வங்கியை தனியார் மயப்படுத்துவது தொடர்பான சகல ஆவணங்களும் தயாரிக்கப்பட்டு இரகசியமாக வைக்கப்பட்டுள்ளதாக அறியவருகிறது.

இதை தவிர இலங்கை மின்சார சபை, கடதாசிக் கூட்டுத்தாபனம் ஆகியன உட்பட பல அரச நிறுவனங்களும் மிக விரைவில் தனியார் நிறுவனங்களாக மாற்றப்பட உள்ளன.

இலங்கை மின்சார சபையைக் கையளிப்பது தொடர்பாக அதன் தலைவரும் அமைச்சின் முக்கிய அதிகாரிகளும் கடந்த வாரம் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

தபால், தொலைத் தொடர்புகள், தொலைபேசி தொடர்பான அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்கள் மயப்படுத்தல் என்ற போர்வையில் பெருமளவிலான தேசியச் சொத்துக்களை ஐ. தே. கட்சி தனது அரசியல் ஆதரவாளர்களிடம் கையளித்தது போலவே தனியார் மயப்படுத்தல் என்ற போர்வையில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த மூத்த அரசியல்வாதிகளால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

தனியார் மயப்படுத்தலால் நிறுவனங்களின் ஊழியர்கள் மத்தியில் தோன்றவுள்ள எதிர்ப்பைச் சமாளிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற்சங்கமான சுதந்திர தொழிலாளர் சங்கத்தை ஈடுபடுத்துவதெனவும் —

கடும் எதிர்ப்பை காட்டுவோருக்கு பதவி உயர்வு மற்றுப் சலுகைகளை வழங்கி அவர்களை வழிக்குக் கொண்டு வரும்பொறுப்பைமூத்தஇடதுசாரி நாடாளுமன்ற உறுப்பினரிடம் விடுவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

கடந்தவாரம் நாடாளுமன்ற கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நிகழ்த்திய கொள்கை விளக்க உரையில் —

உலக வங்கியின் நிபந்தனைகள் பலவற்றை அவர்ஏற்றுக் கொண்டுள்ளார் என்பது தெளிவாகத் தெரிந்ததாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டினர்.

இதே வேளை —

அரசின் கட்டுப்பாட்டை மீறி உருவாகும் வேலைநிறுத்தங்களையும் எதிர்ப்புக்களையும் பொலிசாரை ஏவி முறியடிக்கவும் —

உள்நாட்டு — வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சாதகமாக தொழிலாளர்கள் தொடர்பான சட்டங்களை மேலும் கடினமாக்குவதற்கான திருத்தங்கள் கொண்டு வரவும் —

உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்**
யாழ். கிளை உடுவில் பிரிவு

**தையல் பயிற்சி வகுப்பு**

இன்று 19—1—95 அன்று தையல் பயிற்சி வகுப்பு ஆரம்பமாகின்றது. ஏற்கனவே விண்ணப்பித்தவர்களும் பயிற்சிபெற விரும்புபவர்களும் காலை 9 மணிக்கு சமூகம் தரும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

செயலாளர்
இ. செ. சி. ச.
யாழ். கிளை உடுவில் பிரிவு

காங்கேசன்துறை வீதி,
இணுவில்.

(சி/193)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடிபாடுகளிடையே இருந்து 5,000பேர் மீட்கப்பட்டனர்

## 80,000 பேர் பாடசாலைகளில் தஞ்சம்

பூகம்பத்தினால் பேரழிவு ஏற்பட்டுள்ள மத்திய ஜப்பானில் மீட்புப்பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன' இதுவரை 5ஆயிரம் பேர்வரை இடிபாடுகளிடையே இருந்து மீட்கப்பட்டுள்ளனர்.

வீடு வாசல்களை இழந்தோரில் 80 ஆயிரம்பேர் அரசாங்க கட்டடங்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சம் அடைந்துள்ளனர்.

1923 ஆம் ஆண்டிலேயே கடைசியாக ஜப்பானில் பெரிய அளவில் பூகம்பம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

# மற்றொரு பெரும் பூகம்பம் ஜப்பானை மீண்டும்தாக்கும்?

டோக்கியோ, ஜன. 19

மத்திய ஜப்பானின் ஒஸாக்கா, கோபே பகுதிகளை மற்றொரு பூமிஅதிர்ச்சி அடுத்த ஒரு மாத காலத்துக்குள் தாக்கக் கூடும் என்று ஜப்பானின் நிலநடுக்க ஆய்வு நிறுவனம் எச்சரித்துள்ளது.

இந்த இடங்களைச்சேர்ந்த மக்கள் மிகவும் முன் எச்சரிக்கையுடன்நடந்து கொள்ள வேண்டும் என்றும்—

பூகம்பத்தால் பெரும் பாதிப்பு மீண்டும் ஏற்படக் கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ)

# உருளைக்கிழங்கு செய்கை; சேத விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன 18

யாழ். மாவட்டத்தில் உருளைக்கிழங்கு செய்கையின் ஆரம்ப நடுகையின் போது சேதமடைந்த விதைஉருளைக் கிழங்கு செய்கையாளர்களின் விவரங்கள் கமநலசேவை நிலைய ரீதியாக திரட்டப்பட்டு வருகின்றன.

ஆரம்ப நடுகையின் போது விதை உருளைக்கிழங்கு சேதமான விவசாயிகள் தமக்குரிய கமநலசேவை நிலையங்களுடன் தொடர்பு கொண்டு எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னதாக சேத விவரங்களை பதிவு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

இம் மாதம் 12ஆம் திகதி யாழ். செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட விவசாய ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக இந்த விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாக கமநல சேவைகள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் தெரிவித்தார். (ஐ-4)

# ஆஸ்பத்திரி வெற்றிடங்கள் நிரப்ப அமைச்சர் உத்தரவு

அரச ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள், தாதிமார்கள் மற்றும் சுகாதார ஊழியர்களுக்கு நிலவும் வெற்றிடங்கள் தொடர்பாக ஆராயுமாறு சுகாதார சமூக சேவைகள் பெருந்தெருக்கள் அமைச்சர் ஏ. எச். எம்.பௌஸி அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

இந்த வருட முற்பகுதியில் சகல வெற்றிடங்களையும் நிரப்ப ஆவன செய்யப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (க)

# சர்வதேச மருத்துவ கழக மாநாடு கொழும்பில்

சர்வதேச மருத்துவ கழகத்தின் 125 ஆவது வருடாந்த மாநாடு எதிர்வரும் ஜூலை மாதம் 24ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டில் மலேரியா, எய்ட்ஸ் நோய்கள் மற்றும் கணனியில் நோய்ப்பரிசோதனை போன்ற விடயங்கள் தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

இவை சம்பந்தமான ஆய்வுக் கட்டுரைகளை மாநாட்டு ஏற்பாட்டுக் குழு கோரியுள்ளது, (ஐ-15)

## இத்தாவில் தாய் - சேய் நிலையத்தில்

# கர்ப்பிணி தாய்மாருக்கு மர நிழலில் சிகிச்சை!

தென்மராட்சி, ஜன. 19

பளை இத்தாவில் பகுதியில் தாய் சேய் சிகிச்சை நிலையத்திற்கு நிரந்தர கட்டட வசதியில்லாததால் மாமர நிழலில் அங்கு சிகிச்சைநடத்தப்பட்டு வருகிறது.

கர்ப்பிணித் தாய்மார்களும் குழந்தைகளும் இச் சிகிச்சைக்கு (கிளினிக்) வருவதால் பெரும்பாலானோர் வெய்யிலில் நிற்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# இலங்கை மின்சார சபை தனியார் மயமாகும்

கொழும்பு, ஜன. 19

இலங்கை மின்சாரசபையை தனியார் மயப்படுத்துவது தொடர்பாக அதன் தலைவருக்கும் அமைச்சின் உயர் அதிகாரிகளுக்கும் இடையே கடந்த வாரம் பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதே வேளை தபால் திணைக்களம், தொலைத்தொடர்பு திணைக்களம் ஆகியவற்றுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் நோக்குடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மக்கள் மயப்படுத்தல் என்ற போர்வையில் பெருமளவிலான தேசியச் சொத்துக்களை ஐ. தே. கட்சி தனது ஆதரவாளர்களிடம் கையளித்தது போலவே பொ. ஐ. முன்னணி அரசின் மூத்த அரசியல் வாதிகளும் செயற்பட்டு வருவதாக ''ஹிரு'' சிங்கள வார இதழ் குற்றஞ்சாட்டியுள்ளது. (ஐ-10)

# போதையில் கலாட்டா செய்த அரசியல்வாதி!

கொழும்பு, ஜன. 19

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பிரபல அரசியல்வாதி ஒருவர் அண்மையில் மது போதையில் சென்று கொழும்பு தெற்குப் பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் கலாட்டா செய்ததாகக் கூறப்படுகின்றது.

திடீரென ஹோட்டலின் நீச்சல் தடாகத்தை நோக்கிச் சென்ற இந்த அரசியல்வாதி நீச்சல் தடாகத்தினுள் சிறுநீர் கழிக்க முயன்றாராம். ஆனால் ஹோட்டல் சிப்பந்திகள் ஒருவாறு அவரைச் சமாளித்து ஹோட்டல் மலசல கூடம் ஒன்றுக்கு கூட்டிச் சென்றனர்.

கொழும்பு பிரபல ஆங்கில வார இதழ்கள் இது பற்றிய செய்திகளை வெளியிட்டுள்ளன. (உ)

## ஜப்பானில் பூகம்பம்:

# உயிரிழந்தோர் எண்ணிக்கை 2 ஆயிரமாக உயர்ந்தது

## ஒரு லட்சம் பேர் வீடு, வாசல் இழப்பு

டோக்கியோ, ஜன. 19

மத்திய ஜப்பானில் இடம்பெற்ற பூகம்பத்தில் மரணமானோர் எண்ணிக்கை இரண்டாயிரத்தைத் தாண்டி விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மற்றும் ஆயிரம் பேர் காணாமற் போய் விட்டனர். சுமார் ஒரு லட்சம் பேர் வீடுகளை இழந்துள்ளனர்.

ஜப்பானில் கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத இந்த பேரழிவு குறித்து உலக நாடுகள் கவலை தெரிவித்துள்ளன.

ஜப்பானிய அரசுக்கு அனுதாபச் செய்திகளை பல நாடுகள் அனுப்பி உள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் அவசர பீட்புக்குழு ஒன்றை ஜப்பானுக்கு அனுப்பி உள்ளார்.

இடிபாடுகளிடையே சிக்கி உள்ள சடலங்களை மீட்கும் பணியும், காயம் அடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் வேலைகளும் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

# பாப்பரசர் செல்ல இருந்த விமானத்தில் கோளாறு!

## சிட்னி பயணம் தாமதம்

சிட்னி, ஜன. 19

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் பப்புவாநியுகினியில் இருந்து நேற்று ஆஸ்திரேலியாவுக்கு புறப்பட்டார்.

விமானத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக அவரது பயணத்தில் 20 நிமிட நேர தாமதம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

தலைநகர் சிட்னியில் அவருக்கு கோலாகல வரவேற்பு அளிக்க ஏற்பாடாகி இருந்தது.

சிட்னியில் பாப்பரசருக்கு தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஐ)

# ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம் ஜன. 19

சுவாமி விவேகானந்தரின் 132 ஆவது ஜெயந்தி விழா எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் உள்ள இராமகிருஷ்ணாலயத்தில் நடைபெறும்.

இசை நிகழ்ச்சி, சொற்பொழிவுகள், பஜனை ஆகியவை இடம்பெற உள்ளன.



வெற்றிவாகை சூடிய ஃபிறீஸியன் பசுக்களின் செழுமையும் போசாக்கும் மிக்க பால்



...உங்கள் பிள்ளைக்கு.

உங்கள் பிள்ளை ஃபாம் ட்ரஸ்ட் முழுஆடைப்பாலின் பாலாடைச் சுவையை நிச்சயம் விரும்பும். ஏனெனில் ஃபாம் ட்ரஸ்ட் உலகிலேயே சிறந்த பால்தரும் இனமான ஒல்லாந்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஃபிறீசியன் பசுக்களின் புதுமை குன்றாத பால்.

ஃபாம் ட்ரஸ்ட் பாற் புரதங்கள் நிறைந்ததும் உண்மையிலேயே போசாக்கும் மிக்கது. அதன் தரச்சிறப்பு உற்பத்தியின் முதற்படியிலிருந்தே உத்தரவாதமளிக்கப் படுகின்றது. விற்றமின்கள் சேர்க்கப்பட்ட ஃபாம் ட்ரஸ்ட் ஒரு ஒல்லாந்து ஹூக்வெற் பி. வியின் உற்பத்தி.




QUALITY ASSURED GUARANTEED AT SOURCE

ஃபாம் ட்ரஸ்ட்

நீங்கள் நம்பத்தகுந்த பால்

LOB LINTAS

முகவர்:- ஸ்ரீ விக்னேஷ்வரா ஸ்டோர்ஸ் சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.

(சி/168)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பசன்கன்று விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 10/- மட்டும். தக்காளிக்கன்று 20சதம். ரேஸ்ட் லைன் இன்டஸ்றீஸ் (தனி)லிமிட்டெட், 14,சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-187)

### டயறிகள்

சிறிய பெரிய அளவுகளில் பூபாலசிங்கம் டயறிகள் வெளிவந்து விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு. பூபாலசிங்கம் புத்தக நிலையம் யாழ்ப்பாணம். [சி-286]

### விற்பனையாளர் தேவை

பிரபல விற்பனை நிலையத்திற்கு 20 வயதிற்கும் 30 வயதிற்கும் உட்பட்ட ஆங்கில அறிவுடைய ஆண் விற்பனையாளர் தேவை. மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. கல்வித்தகைமைகளுடனும் முன் அனுபவ விவரங்களுடனும் 30-1-95 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். விளம்பரஇல: 750, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (34735)

### ஆங்கிலம்

Brightஇன் மாணவர்களுக்கான M. K தில்லைமோகன் எழுதிய English Grammar (Omos Selection) விலை 75/-. பூபாலசிங்கம் புத்தகசாலை மற்றும் பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். [34564]

### யாருடையது?

திருநெல்வேலி சந்தியில் பெண்களுக்குரிய துவிச்சக்கர வண்டி கண்டெடுக்கப்பட்டுள்ளது. ஆதாரம்காட்டிப் பெற்றுக்கொள்ளவும். வர்த்தக பாதுகாப்பு சேவை, திருநெல்வேலி. (34763)

### தவறிவிட்டது

சில்லாலை தெற்கு பண்டத்தரிப்பைச் சேர்ந்த சின்னராசா சிவமலர் ஆகிய எனது அடையாள அட்டை [347600229V] பிரயாணத்தின்போது ஆலங்கேணியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு தயவுசெய்து அனுப்பிவைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். வே. சின்னராசா, மே/பா, திபரமசாமி, மான்ஸ் பாடசாலை ஒழுங்கை, உடுவில், சுன்னாகம். (7869)

சோமசுந்தரம் ஜீவரட்ணம் என்பவருடைய சேமிப்புப் புத்தகம் [இலங்கை வங்கி 2ஆம் கிளை க/இல 26002) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சி. சோ. ஜீவரட்ணம் [ஜீவா], 219/6, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். சன்மானம் வழங்கப்படும். [8205]

**BITSMANS**
கல்வி நிறுவனம்
மானிப்பாய்.
**A/L 95 96**
* நாடகமும் அரங்கியலும் *
ஆசிரியர்
திரு. ஸ்கந்தவேள் .B.A
ஆரம்பம்:
21 - 01 - 95
சனி 9 - 30
(சி-299)

# சமூக சேவைக் கழகங்களின் பணி போராட்டச் சூழ்நிலையில் முக்கியம்

## மிட்ரவுண் றோட்டறக்ட் கழக விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜன. 14
தற்போதைய போராட்ட சூழ்நிலையில் யாழ். மிட்ரவுண் றோட்டறக்ட் போன்ற சமூக சேவைக் கழகங்களின் பணி முக்கியத்துவம் வாய்ந்தது.

யாழ். வட்டப் பொறுப்பாளர் திரு. பொ. செந்தமிழன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மிட்ரவுண் றோட்டறக்ட் கழகத்தின் மூன்றாம் ஆண்டுநிறைவும், கழக மண்டபத் திறப்பு விழாவும் கடந்த திங்கட்கிழமை காலை 10 மணியளவில் கோயில் வீதி, நல்லூர் கயிலாசப்பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே திரு. செந்தமிழன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். மிட்ரவுண்ட் றோட்டறக்ட் கழகத்தின் தலைவர் திரு. செல்வேந்திரா தலைமையில் நடைபெற்ற விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

இன்றைய இக்கட்டான கட்டத்தில் இப்படியான கழகமும் உருவாகுவது எமது இயக்கம் வரவேற்கிறது நாங்கள் ஆயுத ரீதியாகப் போராடிவரும் இக்காலகட்டத்தில், இந்தப் போராட்டம் ஏன் நடக்கின்றது என்பதை இக்கழகங்கள் எடுத்துக் கூறிவர வேண்டும்.

மக்களின் துன்பத்தை எமக்கு ஏற்பட்ட துன்பமாகக் கருதி அவர்களுக்குத் சேவை செய்யப்பழக வேண்டும்.

யாழ் .மிட்ரவுண்ட் றோட்டறக்ட் கழகத்தின் இளைஞர் சேவை இத்தகைய சேவையாக வளர்வதை அவதானிக்க முடிகிறது. இந்த இளைஞர்கள் இவ்வாறான சேவைகளின் ஊடாக எதிர்காலத்தில் முன்னுதாரண புருஷர்கள் ஆகுவார்கள் என்றார்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் உரையாற்றுகையில்; கடந்த காலத்தில் இந்தக் கழகம் மாநகராட்சி மன்றத்துடன் இணைந்து பல தொண்டுகளை சேவை மனப்பான்மையுடன் ஆற்றியிருக்கிறது என்று கூறினார்.

முன்னதாக யாழ். றோட்டறிக் கழகத் தலைவர் றோட்டேரியன் ஈ. சரவணபவன் மண்டபத்தைத் திறந்து வைத்தார். தேசியக் கொடியை யாழ். வட்டப் பொறுப்பாளர் திரு. பொ. செந்தமிழன் ஏற்றி வைத்தார்.

கழகத்தின் பெயர்ப்பலகையை இவ்விழாவின் சிறப்பு விருந்தினர் மாநகர ஆணையாளர் பொ. பாலசிங்கம் திரைநீக்கம் செய்து வைத்தார். மங்கள விளக்கை யாழ். றோட்டறிக் கழகத் தலைவரும், அவரது பாரியாரும் ஏற்றி வைத்தனர்.

வடஇலங்கை சர்வோதய அமைப்பாளர் திரு. க. திருநாவுக்கரசு, திரு. றேமன் மாஸ்ரர் ஆகியோருக்கு விழாவில் பிரதம விருந்தினர் விருதுகளை வழங்கிக் கௌரவித்தனர்.

ஊனமுற்றவர்களுக்கு உதவி செய்யும் திட்டத்தின் முதற்கட்டமாக கால் இழந்த இருவருக்கு ஊன்றுகோல்களும், கண்பார்வை குறைந்த ஐந்து பேருக்கு மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன.

இதனைவிட 300 வறிய மாணவர்களுக்கு இலவச அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன. (க-4-17)

## யாழ். மாநகர சுத்திகரிப்பு பிரிவின் பணி

யாழ்ப்பாணம், ஜன. 19
யாழ். மாநகராட்சி மன்றத்தின் விசேட சுத்தி கரிப்பு பிரிவினர் அடுத்த வாரத்தில் இருந்து நாவாந்துறை பகுதியை சுத்திகரிப்பு செய்யவுள்ளனர்.

தற்சமயம் யாழ். நகர் பஜார் பகுதி சுத்திகரிக்கப்பட்டு வருகின்றது.

இந்த சுத்திகரிப்பு பணியில் 20 சுத்திகரிப்பு தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

மாநகராட்சி மன்றம் சுத்திகரிப்பு பிரிவு ஒன்றை தனியாக அமைத்துள்ளது தெரிந்ததே. [க-17]

## வாழைக்குலை திருடர்

யாழ்ப்பாணம், ஜன. 19
கோப்பாய் கிரான்வெளிப் பகுதியில் மீண்டும் வாழைக் குலைத் திருடரின் தொல்லை அதிகரித்து வருகிறது.

இரவு வேளைகளில் இடம் பெறும் இத்திருட்டுச் சம்பவங்களை மக்கள் நித்திரையின்றி காவல் இருந்தும் கண்டுபிடிக்க முடியாதுள்ளதாக அறிய வருகிறது. (க-15)

# 10 ஆண்டுகளில் காசநோயினால் உலகில் 3 கோடி பேர் உயிரிழப்பர்

## ஆய்வு அறிக்கையில் தகவல்

கொழும்பு, ஜன. 19
கட்டுப்படுத்த முடியாத ஒரு நோயாகப் பரவிவரும் காசநோயினால் அடுத்து வரும் 10 ஆண்டு காலப்பகுதியில் உலகில் மூன்று கோடி மக்கள் உயிரிழப்பர் என்று அறிக்கை ஒன்றில் தகவல் வெளியாகியுள்ளது.

உலக காசநோய் பிரச்சினை உக்கிரமடைந்து வருவதாக உலக சுகாதார நிறுவனமும், அமெரிக்காவில் உள்ள நோய் கட்டுப்பாட்டு நிறுவனங்களும் எச்சரித்துள்ளன,

மிகக் கொடிய உயிர்கொல்லி நோயான எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்களை காசநோய் மிக இலகுவில் தொற்றிக் கொள்வதால் புதிதாகப் பரவிவரும் காசநோய் தடுப்பு மருந்துகளை எதிர்த்து நிற்கும் ஆற்றலை பெற்றுள்ளதாகவும் ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

பராமரிப்பு நடவடிக்கைகள் குறைவாக உள்ள நாடுகளில் காசநோய் வேகமாகப் பரவி வருவதாகவும்—

புதிதாகப் பரவிவரும் இந்நோயின் 95சதவீத பாதிப்பு வளர்முக நாடுகளிலேயே குறிப்பாக ஆபிரிக்காவின் சகாரா பிரதேசம் மற்றும் தென்கிழக்கு ஆகிய பகுதிசளில் ஏற்பட்டிருப்பதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

# கைத்தொழில் ஆராய்ச்சி நிலைய சேவை வடக்கு - கிழக்குக்கு இல்லை

## கிளிநொச்சி ஆய்வுப்பட்டறையில்உரை

யாழ்ப்பாணம், ஜன. 19
ஸ்ரீலங்கா பகுதியிலுள்ள எந்தவொரு கைத்தொழில் ஆராய்ச்சி நிலையத்தினதும் சேவை வடக்கு - கிழக்கு பகுதியினருக்குக் கிடைப்பதில்லை.

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன திட்ட முகாமையாளர் திரு. சிவபாதசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்.

அரச திணைக்களங்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்து நடத்திய அனர்த்தங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை இனம் காணுதல் தொடர்பான ஆய்வுப் பட்டறை நிகழ்வில் அவர் உரை நிகழ்த்தினார்.

கிளிநொச்சி மத்திய சல்லூரியில் நடைபெற்ற இந்த வைபவத்தில் திரு. சிவபாதசுந்தரம் ''எதிர்கால கைத்தொழில் அபிவிருத்தி'' பற்றி உரை நிகழ்த்துகையில் மேலும் தெரிவித்ததாவது :-

1990 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா அரச கைத்தொழில் மையங்களை நிறுவி அதன் பகுதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் தேசிய அபிவிருத்தி வங்கியூடாக 41 ஆயிரம் லட்சம் ரூபாவை நிதி ஒழுங்கு செய்துள்ளது. இவற்றைவிட இலங்கை அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் 23 ஆயிரம் லட்சம் ரூபாவை கடனாக அறவீடு செய்துள்ளது. இவற்றுக்கு மேலாக வர்த்தக வங்கிகளும் கடனாக வழங்கியுள்ளன.

இதை நோக்கும் போது எமது பிரதேசத்திற்கென எதுவும் ஒதுக்கப்படவில்லை.

எமது பிரதேசத்திற்கென கைத்தொழில் அபிவிருத்தி நிறுவுவது மிகவும் அவசியமாகத் தெரிகிறது.

ஸ்ரீலங்காவின் ஏனைய பகுதிகளினுடைய கைத்தொழில் ஆராய்ச்சி நிலையங்களான இலங்கை விஞ்ஞான, கைத்தொழில் ஆராய்ச்சிநிலையம்,தென்னை ஆராய்ச்சி நிலையம், றப்பர் ஆராய்ச்சிநிலையம், தேயிலை ஆராய்ச்சி நிலையம், மூலப்பொருள் ஆய்வு நிறுவனம், கைத்தொழில்அபிவிருத்திச்சபை போன்ற ஆராய்ச்சி நிலையங்கள் வடக்கு - கிழக்கில் நிறுவப்படவில்லை.

இத்தகைய ஆராய்ச்சி நிலையங்கள் கைத்தொழில் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமாக இருப்பினும் வடக்கு-கிழக்குப் பிரதேசத்திற்கு இவர்களின் சேவை கிடைக்கவில்லை என்றே சொல்லலாம்.

இதனைக்கருத்தில்கொண்டு வடக்கு- கிழக்குப் பிரதேசங்களை நாமே அபிவிருத்தி செய்ய வேண்டியது அவசியமாகின்றது.

எம்மிடையே உள்ள மூலவளங்கள், மனித வளங்கள், துறைசார் பீடங்கள், நிபுணத்துவம் அனைத்தையும் ஒன்றிணைத்து எமதுபகுதியை அபிவிருத்தி செய்யவேண்டும்.

தேவையேற்படின் வெளிநாட்டில் இருந்து மூலப்பொருள்களை இறக்குமதி செய்து இப் பிரதேச சேவையை பூர்த்தி செய்யலாம்.

அத்தோடு உணவு பதனிடுவதற்கான ஆராய்ச்சி நிலையம் ஒன்று வடக்கு- கிழக்கு பிரதேசத்திற்கென அமைக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. இதேபோல் கைத்தொழில் அதிகார சபையும் இப்பிரதேசத்திற்கென அமைக்கப்பட வேண்டும். இப்படி அவர் மேலும் கூறினார். (இ)

## ப. நோ. கூ. ச. கிளை மீண்டும் திறக்கப்பட்டது

சண்டிலிப்பாய், ஜன. 19
இராணுவ நடவடிக்கை காரணமாக கடந்த இரண்டரை வருடங்களுக்கு முன்னர் மூடப்பட்ட பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பிரான்பற்று கிளை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. ச. செல்வரத்தினம் கடந்த வியாழக்கிழமை மேற்படி கிளையை சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்தார். (இ-131)

## வயோதிபரின் சடலம்

யாழ்ப்பாணம், ஜன.19
தலையில் பலத்த வெட்டுக் காயங்களுடன் வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் காவல் துறையினரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

அரியாலை முள்ளியைச் சேர்ந்த கோவிந்தராசா சிவலிங்கம் (வயது 67) என்பவரது சடலமே ஒப்படைக்கப்பட்டது.

அவர் தலையில்மண்வெட்டியினால் தாக்கப்பட்டார் என்று தெரியவந்தது. (ஐ-15)

## லயன்ஸ் கழகம் இலவச கண்சிகிச்சை

யாழ்ப்பாணம்,ஜன 19
மானிப்பாய் கோவில் பற்றில் கண்ணில் பூப்படலம் வளர்ந்துள்ளநோயாளிகளுக்கு லயன்ஸ் கழகம் இலவச சத்திர சிகிச்சை செய்ய உள்ளது.

மானிப்பாய் கோவில் பற்றில் வசிக்கும் இத்தகைய வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த நோயாளர்களைத் தெரிவு செய்வதற்கான பரிசோதனை எதிர் வரும் 27 ஆம் திகதி காலை 7-30 மணிக்கு மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையில் நடைபெறும் 55 வயதுக்கு மேற்பட்ட நோயாளர்கள் தங்கள் பகுதி லயன்ஸ் அங்கத்தவர்களுடன் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.



(சி-261)

## முக்கிய அறிவித்தல்

**நல்லூர் வணிகர் கழகம்**
பொதுக் கூட்டமும்
புதிய நிர்வாகிகள் தெரிவும்

காலம்: 09 - 02 - 1995 வியாழக்கிழமை
நேரம்: பிற்பகல் 2 - 00 மணி
இடம்: இளங்கலைஞர் மண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர்.

நல்லூர் வணிகர் கழகத்துக்குட்பட்ட அனைத்து வர்த்தகர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

நன்றி

தலைவர். செயலாளர்.
(சி-190)

திருத்தந்தை 2ஆம் ஜோண் போல் வருகை
வண. யோசவ் வாஸ அடிகளார்
நினைவு
# அஞ்சல் முத்திரை வெளியீடு

இடம்: யாழ். பேராலய வளாகம்
காலம்: 20-01-1995 (வெள்ளி) மாலை 4-30மணி
* அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் *
— யாழ். றோ. க. திருச்சபை.
(சி-189)

வட இலங்கைச் சங்கீத சபை
யாழ்ப்பாணம்
சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள்
# இசை ஆராதனை விழா

காலம்: 21 — 01 — 1995, 22 — 01 — 1995
ஆகிய இரு தினமும்
முற்பகல் 8மணி தொடக்கம்
பிற்பகல் 6-30மணி வரை நடைபெறும்.

இடம்: நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபம்

### நிகழ்ச்சி நிரல்
### 21 — 01 — 1995

முற்பகல்
8-00 — 8-45 மங்களவாத்தியம்
திருவாளர்கள் கானமூர்த்தி பஞ்சமூர்த்தி சகோதரர்கள்
8-45 — 9-00 மங்கள விளக்கேற்றல்
திரு. க. திருநாவுக்கரசு
தலைவர், வட இலங்கைச் சர்வோதயம்
திரு. பேரம்பலம் நாகரத்தினம்
வர்த்தகர், யாழ்ப்பாணம்

ஆசியுரை:
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள்
முதல்வர், நல்லை ஆதீனம்

தலைமை உரை:
செல்வி திலகவதி பெரியதம்பி
கல்விப்பணிப்பாளர், கல்வி வலயம்-1

சிறப்புரை:
திருமதி தர்மபூபதி சிதம்பரநாதன்
விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை

இசை அரங்கு
9-00 — 9-30 திருமதி நாகம்மா மகாலிங்கம்
9-30 — 10-00 திருமதி சக்திதேவி சிவகுமார்
10-00 — 10-30 செல்வி சிவப்பிரியா வைரமுத்து
10-30 — 11-00 செல்வி கனகாம்பரி பத்மநாதன்
11-00 — 11-30 செல்வி பிரஷாந்தி ராமச்சந்திரன்
11-30 — 12-00 திருமதி யசோதா ஸ்ரீ குமாரன்

இசை அரங்கு
பிற்பகல்
2-00 — 2-30 திரு. S. குமாரசாமி
2-30 — 3-00 திரு. V. சிவஞானசேகரம்
3-00 — 3-30 திரு. M. ஸ்ரீரங்கநாதன்
3-30 — 4-00 செல்வன் வர்ண ராமேஸ்வரன்
4-00 — 4-30 செல்வி பரமேஸ்வரி கணேசன்
4-30 — 5-00 திரு. சி. சிவஞானராஜா
5-00 — 5-30 திரு. பொன். ஸ்ரீவாமதேவன்
5-30 — 6-00 திரு. S. பாலசிங்கம்

அணிசெய் இசைக்கலைஞர்கள்
வயலின்
திரு. V. K. குமாரசாமி
திரு. சர்வேஸ்வரசர்மா
திரு. S. வெங்கடேஸ்வரசர்மா
செல்வி சாந்தநாயகி சுப்பிரமணியம்
செல்வி பாக்கியலெட்சுமி நடராஜா
திருமதி தி. சிவநாதன்
செல்வி கிருஷ்ணவேணி மயில்வாகனம்
செல்வி சிவகலா சிவஞானம்
திரு. R. S. கேசவமூர்த்தி
திரு. சு. கோபிதாஸ்
செல்வி மாலினி நடேசு
செல்வி கிளேறா அருளானந்தம்

### நிகழ்ச்சி நிரல்
### 22 — 01 — 1995

முற்பகல்
8-00 — 8-45 மங்கள வாத்தியம்
திருவாளர்கள் ரவி—ரஜீ சகோதரர்கள்
8-45 — 9-00 மங்கள விளக்கேற்றல்
திரு. சு. சோமசுந்தரம்
தலைவர் வர்த்தக சங்கம், சுன்னாகம்
9-00—10-30 தொடர்ந்து பஞ்சரத்தின ஆராதனை

இசை அரங்கு:
10-30 — 11-00 திருமதி ஞானகுமாரி சிவனேசன்
11-00 — 11-30 செல்வி சாரதா சச்சிதானந்தம்
11-30 — 12-00 செல்வன் S. குலசிங்கம்
12-00 — 12.30 திரு. S. செல்லத்துரை

இசையரங்கு
பிற்பகல்:
2-00 — 2-30 திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன்
2-30 — 3-00 திருமதிமோகனாம்பிகை கணேசன்
3-00 — 3-30 திரு. M. வர்ணகுலசிங்கம்
3-30 — 4-00 திரு. K. இராமநாதன்
4-00 — 4-30 திரு. V. K. நடராஜா
4-30 — 5-00 திரு. K. R. நடராஜா
5-00 — 5-30 திருமதி மேரி சறோஜா ஜஸ்ரின்
5-30 — 6-00 திரு. பொன் சுந்தரலிங்கம்

மிருதங்கம், கடம், கெஞ்சிரா, மோர்சிங், தம்பூரா கலைஞர்கள்
திரு. M. N. செல்லத்துரை
திரு. S. மகேந்திரன்
திரு. V. சின்னராசா
திரு. S. துரைராஜா
செல்வன் ரதிரூபன்
செல்வன் கமலதாஸ்
திரு. வே. தபோதநாயகம்
திருமதி மீனா ஸ்ரீதரன்
பிரம்மஸ்ரீ சோமாஸ்கந்த சர்மா
திரு. M. சிதம்பரநாதன்
திரு. S. பாலச்சந்திர சர்மா
திரு. மாவை சுப்பிரமணியஐயர்
திரு. ராஜா
திரு. சதா வேல்மாறன்
திரு. செல்வரத்தினம்
திரு. N. சண்முகலிங்கம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
— வட இலங்கைச் சங்கீத சபை.
[சி-191]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## காலம் கடத்துவது ஒவ்வாது!

வடபகுதி மக்களுக்கு கொழும்பில் இருந்து அனுப்பப்பட்ட அரிசி பாவனைக்கு உதவாதது என்ற திடுக்கிடும் தகவலை கொழும்பு சிங்களப் பத்திரிகை ஒன்று அம்பலப் படுத்தி இருக்கிறது.

வடபகுதி மக்களுக்கு நிவாரணமாக வழங்குவதற்கும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பாவனையாளர்களுக்கு விநியோகிப்பதற்குமென அரிசி அனுப்புமாறு நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு உத்தரவிடப்பட்டிருந்ததாகவும் —

நெல் சந்தைப்படுத்தும் சபை, தான் குற்றிய அரிசியை இங்கு அனுப்பாமல் கொழும்பில் உள்ள மொத்த வியாபாரிகளிடம் இருந்தும், தரகர்கள் மூலமாகவும் பெற்ற தரங்குறைந்த அரிசியை வடக்கே அனுப்பிவிட்டு —

அந்தத் தரங்குறைந்த அரிசி வகைகளுக்குப் பதிலாக, சபை குற்றிய நெல்லை மாற்றிக் கொடுத்து மோசடியில் ஈடுபட்டது — இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கம் வடபகுதி மீது விதித்த பொருளாதாரத் தடை, ஸ்ரீலங்கா படை அதிகாரிகள் மட்டும் சட்டவிரோதமாக பணம் சம்பாதித்துக் கோடீஸ்வரர்களாக மாறுவதற்கு வாய்ப்பு அளிக்கவில்லை.

அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களில் பணிபுரியும் அதிகாரிகள் மோசடிகளிலும், ஊழல்களிலும், லஞ்சம் வாங்குவதிலும் ஈடுபட்டு திடீர் பணக்காரர்களாக மாறுவதற்கும் நல்ல சந்தர்ப்பத்தை வழங்கியது.

கடந்த அரசாங்க காலத்தில் லஞ்சம், ஊழல், மோசடி என்பன தெற்கில் அப்போதைய "ஒழுங்காக" மாறியிருந்தன.

அத்தகைய சூழ்நிலை, வடக்கு-கிழக்கு மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இராணுவ முற்றுகை, வடக்கின் மீது திணிக்கப்பட்ட பொருளாதார முற்றுகை ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட சகலரையும், தட்டிக் கேட்கவோ, தண்டிக்கவோ எவரும் இல்லை என்ற எண்ணத்துடன் மேற்கூறிய மூன்று சமூக விரோதச் செயல்களிலும் மிகத் துணிவுடன் ஈடுபடத் தூண்டியது.

வடபகுதி மக்கள், தமிழ் மக்கள் அரசாங்கத்துக்கே "இடங்கண்டவர்களாகி" விட்ட நிலையில், அதிகாரிகளுக்கும் மோசடிக்காரர்களுக்கும் "ஏறி மிதிக்கக் கூடியவர்கள்" ஆகியதில் வியப்பில்லை! பண ஆசை பிடித்தவர்களுக்கு தேவைப்பட்டது பணமே அன்றி, தமிழர்களின் நலன் அல்ல.

வடபகுதி மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடை கொழும்பில் எந்தளவுக்கு ஊழல் மோசடிகளை வளர்த்தது: தமிழர்களை மனித நேயமின்றி நடத்தத் தூண்டியது: என்பதனை புதிய அரசாங்கமாவது உணராதிருப்பது கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

பொருளாதாரத் தடையை நீக்குவதன் மூலம் தமிழ் மக்களின் நன்றிக்கும் நம்பிக்கைக்கும் உரியவர்களாகுவது மட்டுமன்றி, அந்தத் தடையினால் மலிந்து போயுள்ள லஞ்சம், ஊழல், மோசடிகளையும் முற்றாகக் களைந்து விடலாம்.

இந்தச் சமூக விரோதச் செயல்களை ஒழிக்க வேண்டும் என்பதும் புதிய அரசாங்கத்தின் இலக்குகளில் ஒன்று என்பதால் பொருளாதாரத் தடையை முற்றாக நீக்குவதன் மூலம், ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை விழ்த்தலாம். ஆனால் கஷ்டமின்றி செய்யக்கூடிய இதுவிடயத்தில் அரசு காலத்தைக் கடத்துகிறது.

மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தையின் போதாவது பொருளாதாரத் தடையை மேலும் தளர்த்துவதற்குத் தயாராகவே அரச பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் ஏமாற்றத்தைத் தரும்விதத்தில் அது குறித்து முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. புதிய அரசு இது குறித்து தாமதம் காட்டுவது— பின்னடித்து நிற்பது— ஒவ்வாததாகும். அதன் சொல்லும் செயலும் முரண்பட்டு நிற்பதனையே இது காட்டுகிறது!

சந்திரிகாவின் வாசஸ்தலத்தில் குண்டு

# கைதான இருவரும் தீவிர விசாரணையில்!

கொழும்பு, ஜன. 19

கொள்ளுப்பிட்டியில் ஜனாதிபதி சந்திரிகாவின் வாசஸ்தலத்தில் பிளாஸ்ரிக் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள இருவரும் ஜனாதிபதியின் பாதுகாப்புக்கு பொறுப்பான விசேட அதிரடி கொமாண்டோ படைப் பிரிவைச்சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் தனித்தனியே புலனாய்வுப் பிரிவினரால் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர் என ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

(ஐ-3)

# விடுமுறையில் சென்று குண்டுடன் திரும்பினராம்!

கொழும்பு, ஜன. 19

ஜனாதிபதியின் வாசஸ்தலத்தில் வெடிகுண்டுகள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட காவலர்கள் இருவரும் கைது செய்யப்பட்ட சமயம் விடுமுறையில் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

விடுமுறையில் சென்றிருந்த இருவரும் மீண்டும் கடமைக்குத் திரும்பும்போது தம்முடன் வெடிகுண்டுகளை எடுத்து வந்துள்ளனர் என்றும்—

அச்சமயம் ஜனாதிபதியின் வாசஸ்தலத்தில் காவல்கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் நுழைவாயிலில் வைத்து இருவரையும் சோதனை செய்தபோது அவர்கள் வைத்திருந்த பை ஒன்றில் இருந்து வெடிகுண்டுகள் கைப்பற்றப்பட்டதாகவும் செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

வெடிகுண்டுகள் ஜனாதிபதி சந்திரிகாவின் மகன் தங்கும் அறைக்கு அருகில் இருந்தே மீட்கப்பட்டதாக மற்றொரு செய்தி தெரிவித்தது

[ஐ-3]

# மீன்பிடிக்க பயன்படுத்த வைத்திருந்த குண்டுகளாம்!

## கைதானோர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 19

மீன்பிடித் தேவைகளுக்காகவே வெடிகுண்டுகளை வைத்திருந்தோம் என்று ஜனாதிபதியின் வாசஸ்தலத்தில் குண்டுகளுடன் கைது செய்யப்பட்ட படையினர் இருவரும் தெரிவித்துள்ளனர்.

கைதான இருவரையும் தீவிர விசாரணை செய்துவரும் புலனாய்வுப் பொலீஸ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி இதனைத் தெரிவித்தது.

(ஐ-3)

# 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' காணி அரசால் சுவீகரிப்பு!

கொழும்பு, ஜன. 19

புத்தளம் மாவட்டம் இரணவில பகுதியில் அமெரிக்க வானொலி நிலையத்தின் நிர்மானப் பணிக்கென ஒதுக்கப்பட்ட காணியில் சுமார் ஆயிரம் ஏக்கரை அரசு சுவீகரிக்க உள்ளது.

விவசாய, காணி வன வள அமைச்சர் திரு. டி. எம். ஜெயரட்ன இதனைத் தெரிவித்தார்.

சுவீகரிக்கப்படும் காணி அப்பகுதியில் நில வசதியற்ற மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் என்றும் —

சுவீகரிப்பு உடன்படிக்கை கடந்த வாரம் கைச்சாத்திடப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இரணவில பகுதியில் அமெரிக்காவின் வானொலி நிலையம் அமைக்கப்படுவதற்கு அப்பகுதி மக்கள் பலத்த எதிர்ப்புத் தெரிவித்து வந்ததை அடுத்து —

"வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" வானொலி நிலையத்தை அமைப்பதற்காக அமெரிக்க இலங்கை அரசுகளிடையே செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை இடைநிறுத்தப்பட்டிருப்பது தெரிந்ததே. (ஐ)

## விவசாயிகள் ஓய்வூதிய கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜன. 19

விவசாய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் விவசாயிகளுக்கான கடந்த மார்கழி மற்றும் இம்மாதத்துக்கான கொடுப்பனவுகள் எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கள் முற்பகல் 10 மணிக்கு கமத்தொழில் காப்புறுதிச் சபையின் மாவட்டக் காரியாலயத்தில் வழங்கப்படவிருப்பதாக அதன் உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-4)

## விபத்தில் 2 பேர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜன. 19

தாவடிச் சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்து ஒன்றில் இருவர் படுகாயமடைந்தனர்.

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் பாதசாரி ஒருவர் மீது மோதியதில் விபத்து ஏற்பட்டது.

மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த பரமேஸ்வர சர்மா முத்துக்குமாரன் (வயது 21 — மானிப்பாய்) பாதசாரியான ஆசைப்பிள்ளை வீரசிங்கம் (வயது65 —கொக்குவில்) ஆகிய இருவருமே படுகாயமடைந்தனர். இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (ஐ-15)

# மாணவர்களைச் சேர்க்க கட்டணம் அறவிடக் கூடாது!

## அதிபர்களுக்கு அமைச்சு உத்தரவு

கொழும்பு, ஜன. 19

பாடசாலைகளில் புதிதாக மாணவர்கள் சேர்க்கப்படும் போது அவர்களதுபெற்றோர்களிடமிருந்து வசதிக் கட்டணத்தைத் தவிர வேறு எவ்விதமான கட்டணங்களையோ பொருள்களையோ எவ்வழியிலும் பெற்றுக் கொள்ளக் கூடாது என கல்வி அமைச்சு சகல பாடசாலை அதிபர்களையும் எச்சரித்துள்ளது.

இது சம்பந்தமான சுற்று நிருபம் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

## தளபாடங்கள் வழங்கப்பட்டன

பளை பிரதேச செயலர் பிரிவில் உள்ள 18 கிராம அலுவலர்களுக்கும் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் 90 ஆயிரம் ரூபா செலவில் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

# தபால் பொதி எடுத்துவர கட்டுப்பாடுகளை நீக்குக!

## பிரதி அஞ்சல் அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 19

பருத்தித்துறைக்கு வரும் கப்பல்களில் தபால் பொதிகளை எடுத்துவர விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நீக்கிவிடுமாறு தபால்மா அதிபரையும், தபால் தந்தி தொலைத் தொடர்புகள் அமைச்சரையும் தாம் கேட்டிருப்பதாக வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் திரு. எஸ். எம். சேதுகாவலர் தெரிவித்தார்.

பருத்தித்துறைக்கு கப்பல்களில் தபால் பொதிகளை அனுப்புவதற்கு சம்பந்தப்பட்ட கப்பல் கம்பனி மற்றும் பாதுகாப்பு அமைச்சு, அத்தியாவசிய சேவைகள் பிரிவு ஆகியவற்றின் அனுமதி முன்கூட்டியே பெறப்பட வேண்டும் என சட்டுப்பாடு விதிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

இது தொடர்பாக கொழும்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தாம் ஆட்சேபம் தெரிவித்ததாகவும் திரு. எஸ் எம். சேதுகாவலர் கூறினார். (ஐ-4)

## புலிகளின் குரல் வானொலியில்

19 — 01 — 1995
வியாழன் இரவு

- ★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்
- ★ 8-10 — சித்த மருத்துவக் குறிப்புகள்
- ★ 8-20 — உழைப்போம் உயர்வோம் நிகழ்ச்சியில் "கழுவிய உப்பு" குறு நாடகம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தாயகப் பாடல்கள்
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

20 — 01 — 1995
வெள்ளி காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — மணியாரம்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப் பாடல்கள்
- ★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## தமிழீழ வானொலி

ஒலிபரப்பு
வியாழன் மாலை

- ★ 5-00 —ஒலிபரப்பு ஆரம்பம்
- ★ 5-01 — சிந்தனை சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக்கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — மழலைகளுக்காக
- ★ 5-30 — இசையும் கதையும் நிகழ்ச்சியில் 'துயரங்கள்'
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 — பொன் விளையும் பூமி 'உணர வேண்டும்' நாடகம்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — விளையாட்டு சம்பந்தமான கேள்வி பதில்
- ★ 6-25 — என் தெரிவு
- ★ 6-30—மாலை ஒலிபரப்பு நிறைவு பெறும்

# வடபகுதி மக்களின் நம்பிக்கையை வெல்வதில் வேகத்தைக் குறைத்த மூன்றாம் கட்டப் பேச்சு

*விடுதலைப் புலிகளுக்கும் அரச தரப்பினருக்கும் இடையில் யாழ். நகரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மூன்றாம் கட்டப் பேச்சுக்கள் பற்றிய ஒரு கண்ணோட்டம் இது.*

விடுதலைப் புலிகளுக்கும் அரச தரப்புக்கும் இடையில் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 3 ஆம் கட்டப் பேச்சுக்கள் தமிழ் மக்களின் அவசர அன்றாடப் பிரச்சினைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் எதுவித முன்னேற்றமும் இன்றி—

முடிவு எதுவும் இன்றி — பேச்சுக்கள் முடிவடைந்தது பெரும் ஏமாற்றத்தை அளித்தது.

3 ஆம் கட்டப் பேச்சுக்களில் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குஇறுதிமுடிவு எடுக்கப்படும் என்றும் —

அதையடுத்து நடக்கும் பேச்சுக்களில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் அடிப்படைப் பிரச்சினை பற்றி ஆராயப்படும் என்றும் — பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த பேச்சு நடப்பதற்கு இரு தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளில் முக்கியமானவையான பொருளாதாரத் தடை தளர்வு, போக்குவரத்து பாதை திறத்தல், மீன் பிடி தடை நீக்கல் போன்றவை தொடர்பான முக்கிய முடிவுகளுடன் அரச தூதுக்குழுவினர் யாழ்ப்பாணம் வருவர் என்று சகலரும் எதிர்பார்த்தனர்.

ஆனால் மூன்றாம் கட்டப் பேச்சுக்களின் முடிவுகள் பெரும் ஏமாற்றத்தைத் தந்தன.

மூன்றாம் கட்டப் பேச்சுக்காக அரச குழுவினர் யாழ். வருவதற்கு முன்னர் கொழும்பில் பல தடவைகள் ஜனாதிபதியுடனும், படை உயர் அதிகாரிகளுடனும் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.

அதன் பலனாக 3ஆம் கட்டப் பேச்சுக்கள் முக்கிய கட்டத்துக்குச் செல்லும் என்று சகலராலும் எதிர்பார்க்கப்பட்டது.

### தாமதமாக வந்த அரச குழுவினர்

மூன்றாம்கட்டப் பேச்சுக்காக அரச குழுவினர் யாழ். சென் ஜோன்ஸ் விளையாட்டரங்கில் சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஹெலியில் வந்திறக்குவர் என திட்டமிடப்பட்டிருந்தபோதும், அரச குழுவினர் ஒருமணி நேரம் தாமதமாகவே வந்தனர்.

அரச குழுவினர் இரத்மலானையில் இருந்து புறப்பட்ட விமானம் "சிக்னல்" பிரச்சினையால் பலாலியில் இறக்குவதில் தாமதம் எனத் தெரிவிக்கப்பட்ட போதும்— அரச குழுவினர் பலாலியில் இராணுவ உயர் அதிகாரிகளுடன் இறுதிப் பேச்சில் ஈடுபட்டதாக பின்னர் தெரிய வந்தது

பாதுகாப்பு அமைச்சு மேலதிக செயலாளர் பந்துசேன, இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா ஆகியோர் பலாலியில் மாநாடு ஒன்றை நடத்தி படைத்தள அதிகாரிகளிடம் ஆலோசனை பெற்றனர்.

தாமதமாக வந்த அரச குழுவினர் — விடுதலைப் புலிகள் பேச்சுக்கள் காலை 10 மணிக்கு ஆரம்பமாகின.

### படையினரின் ஒப்பந்த மீறல்

முதலில் எடுக்கப்பட்ட விடயம் மோதல் தவிர்ப்பு உடன்பாடு.

இந்த உடன்பாட்டில் இடம்பெற்றுள்ள படையினரின் மீறல்கள் குறித்து பட்டியலிட்டு விடுதலைப் புலிகள் எடுத்துக் கூறினர்.

கிழக்கில் தமது போராளிகள் மீது படையினர் மேற் கொள்ளும் அடாவடித்தனங்கள் குறித்து விடுதலைப்புலிகள் அரச குழுவினரிடம் எடுத்துக் கூறினார்கள்.

அந்த விடயத்துடன் 12-30 மணிக்கு நிறுத்தப்பட்ட பேச்சுக்கள் பின்னர் பி. ப 2 - 30 மணிக்கு ஆரம்பமாகின.

யாழ். குடாநாட்டுக்கான போக்குவரத்துப் பாதையை திறக்கும் விடயம் மற்றும் பொருளாதாரத் தடையை நீக்கும் விடயம்—

மீன்பிடித்தடையை நீக்கும் விடயம்— குறித்து இருதரப்பினருக்கும் இடையில் காரசாரமான விவாதங்கள் மாலைப் பேச்சில் இடம் பெற்றன.

யாழ். குடாநாட்டுக்கு பாதுகாப்பான பாதையை திறக்கும் விடயத்தில் — பூநகரிப் பாதையை— படையினரை விலக்கி திறக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் பல காரணங்களை காட்டி ஆணித்தரமான தமது நிலைப்பாட்டைத் தெரிவித்தார்கள்

இந்தப் பேச்சில் படையினர் தரப்பில் கலந்து கொண்ட பிரிகேடியர் சிறிபீரிஸ். பூநகரிப் பாதையின் வரைபடங்களை சமர்பித்து, "குறிப்பிட்ட ஒரு தூரத்துக்கு படையினரை விலக்கி பின்நோக்கிச் செல்லச் செய்கிறோம் நீங்கள் ஆரம்பத்தில் இதற்கு இணங்குங்கள் "என்று கேட்டார்.

ஆரம்பத்தில் இந்த ஆலோசனையை ஏற்றுக் கொள்ளுங்கள். படிப்படியாக நாம் முழுமையாக வாபஸ் பெற ஏற்பாடு செய்கிறோம் என்ற தோரணையில் பேசி, எப்படியாவது விடுதலைப் புலிகளை இதற்கு இணங்க வைக்க அவர் பெரும் பிரயத்தனம் எடுத்தார்.

சில கட்டத்தில் ஆக்கிரோஷமாகவும், உணர்ச்சி வசப்பட்டுப் அவர் பேசியதாகவும் தெரிய வந்தது.

ஆனால் விடுதலைப் புலிகள் வெட்டொன்று துண்டு இரண்டு என்ற வகையில், பூநகரியில் இருந்து படையினரை வாபஸ் பெற்ற பின்பே பாதையை போக்குவரத்துக்குத் திறக்க வேண்டும் என்று அழுத்தமாக— திட்ட வட்டமாக— கூறிவிட்டார்கள்.

பொருளாதாரத் தடை நீக்கம் தொடர்பான விடயம் அடுத்ததாக ஆராயப்பட்ட போது இராணுவத் [illegible] பொருள்கள் தவிர்ந்த ஏனைய [illegible] மீதான தடையை நீக்க வேண்டும் என்றும்—

தடைநீக்கப்பட்ட பொருள்கள் வடக்குக்கு ஒழுங்காக வந்துசேர ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும்— விடுதலைப் புலிகள் கேட்டுக் கொண்டனர்.

பொருள்கள் மீதான தடையை நீக்குவதிலும் படையின் சார்பில் கலந்துகொண்ட இராணுவ அதிகாரியே பெரும் முட்டுக்கட்டையாக இருந்ததாகத் தெரியவந்தது.

ஸ்ரீலங்கா அரசால் கடைசியாக விடுக்கப்பட்ட தடை செய்யப்பட்ட பொருள்கள் தொடர்பான வர்த்தமானிப் பிரதிகளில் உள்ள பொருள்கள் தொடர்பாக இருதரப்பும் ஆராய்ந்தன. இராணுவ அதிகாரி பலதடவை இந்த விடயத்தில் குறுக்கிட்டாராம்.

கடந்த காலங்களில் யூரியா மீது விதிக்கப்பட்ட தடையால் குடாநாட்டு பயிர்ச் செய்கை பாதிப்படைந்து விட்டதால் யூரியாவை தனியாக அனுப்பாவிட்டாலும் யூரியாவுடன் கலந்த உரத்தையாவது அனுப்ப வேண்டும் என்று விடுதலைப் புலிகள் வற்புறுத்தினர்.

சகல தர பற்றறிகளையும் குடாநாட்டுக்குள் எடுத்துச் செல்ல அனுமதிக்க இருப்பதாகத் தெரிவித்த அரச குழுவினர், விரைவில் அரசுடன் பேசி ஏனைய பொருள்கள் மீதான தடையை நீக்குவது பற்றி அறிவிப்பதாக தெரிவித்தனர்.

தொகுப்பு:
**மாவை குகன்**

### புனர்வாழ்வு அறிக்கை

அடுத்ததாக யாழ். மாவட்டத்தில் அவசரமாக மேற்கொள்ள வேண்டிய புனர்வாழ்வுத் திட்டம் குறித்த அறிக்கை ஒன்றை விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் அரச குழுவினரிடம் கையளித்தனர்.

மாலை 4-30 மணிக்கு முடிவடைந்த பேச்சுக்களையடுத்து அரச குழுப் பிரதிநிதிகள் உள்நாட்டு. வெளிநாட்டு, உள்ளூர் செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

"பேச்சுக்கள் தோல்வியடையவில்லை என்றும் —

முன்னேற்றப் பாதையில் செல்வதாகவும் — அரச தூதுக்குழுவின் தலைவர் பாலபட்டபென்டி தெரிவித்தார்.

"பேச்சுக்கள் எடுத்த எடுப்பில் வெற்றி பெறப் போவதில்லை. படிப்படியாகத்தான் செல்ல வேண்டும். மனம் திறந்து பலவிடயங்களை ஆராய்ந்தோம். பேச்சுக்கள் முன்னேற்றப்பாதையில் தான் செல்கின்றன என்று குழுவின் உறுப்பினரான நவின் குணரத்தின தெரிவித்தார்.

அதேவேளை —

விடுதலைப்புலிகள் தரப்பில் தலைவர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன் உள்நாட்டு, வெளிநாட்டு. உள்ளூர் செய்தியாளர்களை தனியாக சந்தித்தபோது. அரசின் மெத்தனப்போக்கைக்கண்டித்தார்.

"மக்களின் அன்றாடப் பிரச்சினை பற்றி கடந்த 2 கட்டப் பேச்சுக்களில் தெரிவித்த விடயங்கள் குறித்துத்தான் 3ஆம் கட்டப் பேச்சிலும் ஆராய்ந்தோம்.

மக்களின் அன்றாடப் பிரச்சினை குறித்து நாம் முன்னர் தெரிவித்த விடயங்களுக்கு நல்ல முடிவுடன் வருவார்கள் என எதிர்பார்த்தோம். ஆனால் அது நடக்கவில்லையே" என்று அவர் கூறினார்.

### ஆமைவேகத்தில் நகரும் அரசு

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 13ஆம், 14 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடந்த பேச்சுக்களின் போதும், அதன் பின்பும் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குதீர்வுகாண அரசு காட்டிய அக்கறை. அவசரம் இப்போது இல்லை என்பது மூன்றாம் கட்டப் பேச்சுக்களில் இருந்து தெளிவாகிறது.

முதலாம் கட்டப் பேச்சு முடிந்தவுடன் ஏதோ "பெரிதாக" யாழ்ப்பாணத்துக்கு செய்யப்போவதாக "தம்பட்டம்" அடித்த அரசு இன்று மிகமிக ஆறுதலாக — ஆமை வேகத்தில் செயற்படுவதை காணக் கூடியதாக இருப்பதாக வெளிநாட்டு செய்தியாளர்கள் கருத்து வெளியிட்டனர்.

வெளிநாடுகளிடம் நிதி உதவி பெறுவதற்காக — இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்கிறோம் என்று சர்வதேசத்துக்கு தெரியப்படுத்த, வெளிநாட்டு செய்தியாளர்களை ஹெலியில் யாழ்ப்பாணம் அழைத்து வந்து அவர்கள் மூலம் பிரசாரம் செய்து அரசு நாடகம் ஆடுகிறதா என்ற கேள்வி தற்போது எழுகின்றது என்றும் —

அரசுக்கு உண்மையில் அக்கறையிருந்தால் உடன் எங்கள் அன்றாடப் பிரச்சினைகளுக்கு உடன் தீர்வு காணட்டும என்றும் — யாழ்ப்பாணத்துச் சாதாரண மக்கள் கருத்து வெளியிடுகிறார்கள்.

அடுத்த கட்ட பேச்சுத் திகதி கூட இன்னும் அறிவிக்கப்படவில்லை

இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து பேசுவதில் அளவுக்கு அதிகமான அவசரம் காட்டுவதைத் தவிர்த்து, வடபகுதி மக்களின் அன்றாடப் பிரச்சினையை தீர்க்க இதய சுத்தியுடன் செயற்பட வேண்டும். அப்போது தான் அவரால் வடக்கு மக்களின் நம்பிக்கையைப் பெற முடியும்.

அவர் அப்படி செயற்படுவாரா என்பது இவ்வாரத்தில் தெரியவரும் என்று செய்திகள் தெரிவிக்கின்ற போதும் —

யாழ் மக்களின் மனதை வெல்லாத வரையில் அவரால் சமாதானத்தை கொண்டு வரமுடியாது; சமாதானத்தின் எதிர் வடிவத்தையே அவர் ஏற்படுத்த முடியும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வுத் திட்டம் குறித்து சந்திரிகா மகா சங்கத்துடன் ஆலோசனை

கொழும்பு, ஜனவரி 19

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான தீர்வுத் திட்டம் குறித்து மகாசங்கத்துடன் அரசாங்கம் கலந்தாலோசிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல் நடவடிக்கையாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று கொழும்பில் உள்ள சாலிகராமவில் மகா சங்கத்தினரின் உயர்மட்டத் தூதுக்குழு ஒன்றைச் சந்தித்தார்.

இந்தத் தூதுக்குழுவில் அமரபுர நிக்காயாவின் தலைவர் மடிகே பஞ்ஞாசிக மகாநாயக்க தேரர், ராமன்ய நிக்காயாவைச் சேர்ந்த வண. தொட்டவல பஞ்ஞாசார மகாநாயக்க தேரர் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

மகாசங்கத்தின் ஏனைய உயர் மட்டப் பிரதிநிதிகளை ஜனாதிபதி அடுத்த மாதம் சந்திப்பார் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் கண்டியில் மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகளையும் ஜனாதிபதி சந்தித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

## கடற் கொந்தளிப்பில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மீனவர்களில் ஒருவரான— காங்கேசன்துறையிலிருந்து இடம்பெயர்ந்து வசிப்பவரான— சுப்பையா ரவி என்ற இளைஞர் காயமடைந்தார். இவர் சிகிச்சைக்காக பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மற்றும் இரு படகுகள் பருத்தித்துறை துறைமுகத்துக்கு நேரே நேற்றுப் பகல் அலைகளில் (அடிபட்டுக்) கொண்டிருந்ததைக் கண்ட ஏனைய மீனவர்கள் படகு ஒன்றில் சென்று அவ்விரு படகுகளையும், அவற்றிலிருந்த மீனவர்களையும் நேற்று பிற்பகல் 2.45 மணியளவில் மீட்டு வந்தனர்.

இவை போக இன்னமும் மூன்று படகுகளையும் அவற்றில் சென்ற சுமார் 8 மீனவர்களையும் காணவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களைத் தேடும்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இவர்களது குடும்பங்கள் கடலை பார்த்தபடி காத்திருக்கின்றன.

காணமல்போன (இ)ந்த மீனவர்கள் பருத்தித்துறை சுப்பர்மடத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ-173)

## வடக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறவுள்ள தமது தரப்பு உறுப்பினர்களை நியமிக்குமாறு விடுதலைப் புலிகளை அரசாங்கம் கேட்டுள்ளது.

வடபகுதியை புனரமைப்பதற்கு அவசர திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பா. சாரதாம்பாள்

மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர், முத்துக்குமாரசுவாமி தேவஸ்தான குருபரம்பரையினரான திருமதி பா. சாரதாம்பாள் அவர்கள் 18-01-95 நேற்று காலமானார்.

இவர் அமரர் சிவஸ்ரீ கு. பாலசுப்பிரமணியக் குருக்கள் அவர்களின் அன்பு மனைவியும், பிரம்மஸ்ரீ சிவ. வைத்தீஸ்வரசர்மா சீதாலட்சுமிஅம்மா தம்பதிகளின் மூத்தமகளும், பிரம்மஸ்ரீ குமாரசுவாமி ஐயர் இலட்சுமி அம்மா ஆகியோரின் அன்பு மருமகளும், சுகந்தினியின அன்புத் தாயாரும், பிரம்மஸ்ரீ வை. ஆனந்தசுப்பிரமணியசர்மா, அமரர் பிரம்மஸ்ரீ வை. சண்முகராஜரட்ணசர்மா, பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்தசர்மா, ராஜதாம்பாள், வனஜாம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சௌந்தரநாயகி, லலிதாதேவி, வாகீஸ்வரி, பிரம்மஸ்ரீ தியாகராஜசர்மா, பிரம்மஸ்ரீ ஜெயானந்தசர்மா ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18-01-1995 (நேற்று) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பா. சுகந்தினி (மகள்)

மூளாய்,
பிள்ளையார் கோவிலடி, (34771)

## தம்பையா கந்தையா
(கிளாக்கர்)

மானிப்பாய் இணுவில் வீதியைச் சேர்ந்த தம்பையா கந்தையா காலமானார். அன்னார் காலஞ்சென்ற தம்பையா அன்னம்மா தம்பதிகளின் மகனும், மலர்மதியின் அன்புக் கணவரும், நகுலேஸ்வரன் (ஜேர்மனி), கேதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், நடராசா, கயிலாயபிள்ளை, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் றேமளாவின் (ஜேர்மனி), மாமனாரும், துஷ்யந்தனின் அன்பு பேரனுமாவார். ஈமக்கிரியைகளுக்காக வியாழக்கிழமை 10-00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து பூதவுடல் பிப்பிலி மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இதனை உற்றார், உறவினருக்கு அறிய தருகிறோம்.

தகவல்
மலர்மதி
(மனைவி)

இணுவில் வீதி,
மானிப்பாய். (34768)

## திருமதி முத்தையா இராஜேஸ்வரி

சொக்குவிலைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காடு வாசியுமான திருமதி மு. இராஜேஸ்வரி நேற்று (18-1-95) காலமாகிவிட்டார்-

இவர் ஆறுமுகம் முத்தையாவின் மனைவியும், இராசகோபால் [கனடா], ஸ்ரீபகவான் [கனடா], தேவமனோகரன் [கனடா], கலாறஞ்சினிதேவி [கனடா], புஸ்பகாந்தன், விஜயகுமார், [கனடா], ரவீந்திரன் [ஜேர்மனி], உதயகுமார் [கனடா] ஆகியோரின் தாயாரும், பராசக்தி, வசந்தாதேவி, வசந்தமலர், புஸ்பமலர், சாந்தா, றஞ்சி, பாலசுந்தரம், ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ராஜேஸ்கண்ணன் [கனடா], ராதிகா [கனடா], ரஜீவன் [கனடா], விஜிகா, ஜதீஸ் [கனடா] சுகிர்தன்[கனடா], சுதாகர், கஜிதன், சஜித்[கனடா] ஜெயபாலன் [கனடா], குணபாலன் [கனடா], நேசபாலன் [கனடா], சஜிதா [கனடா], அரிகரன், வினோகரன், மியூரிகா, தயூரிகா, லிசாத்கரன், டயான் [கனடா], சந்திரிகா-பரமேஸ்வரன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைள் இன்று (19-01 95) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கோப்பாய் கிறீஸ்தவ மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
மு.புஸ்பகாந்தன்
(மகன்)

ஜி.பி எஸ். றோட்,
கல்வியங்காடு. [34772]

## திருமதி எலிசபேத் பிரான்சீஸ்

பாண்டியன் தாழ்வைச் சேர்ந்த திருமதி எலிசபேத பிரான்சிஸ் (இளைப்பாறிய ஆசிரியை) 12-01-1995 அன்று வவுனியாவில் காலமாகி விட்டார். நல்லடக்கம் 12-01-1995 இல் வவுனியாவில் நடைபெற்றது.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
எஸ். ஜெயரெட்டினம்,
(மருமகன்)

27/13, புங்கன்குளம் வீதி,
பாண்டியன் தாழ்வு,
யாழ்ப்பாணம். [34767]

## மிதிவெடியில் சிக்கியவர் கால் இழந்தார்

அளவெட்டி, ஜன. 19

பத்தைமேனி வைரவர்கோயிலடிப் பகுதியில் உள்ள தமது வீட்டுக்கு அயற்பகுதியில குழைவெட்டச் சென்ற ஒருவர் மிதிவெடியில் சிக்கி தனது வலது காலின் பாதத்தை இழந்தார்.

நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் செல்லர் சின்னராசா [வயது 46] என்ற குடும்பஸ்தரே காயமுற்றார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். [உ-13]

## கண் சிகிச்சை

வடமராட்சி, ஜன. 19

பல வருட கால இடைவெளிக்குப் பின்னர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் கண் சிகிச்சைப் பிரிவு இம்மாதம் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகிறது. (உ-173)

## நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஜன. 19

பொம்மைவெளி சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் 2ஆம் ஆண்டு நிறைவு விழா நாளை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

இவ்விழா நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் மழை காரணமாக அது ஒத்திவைக்கப்பட்டது.

## நடமாடும் செயலகம்

சங்கானைப் பிரதேச செயலகம் நடமாடும் செயலகம் ஒன்றை வட்டுக் கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தாவளைப் பாடசாலை மண்டபத்தில் நடத்தவுள்ளது.

சங்கானைப் பிரதேச செயலகத்தின் நடமாடும் சேவையின் ஆரம்ப நாள் நிகழ்வாகவும் அமையும் இந்த நிகழ்ச்சிக்கு பிரதேச செயலாளர் திரு. கா. சந்திரராசா தலைமை வகிப்பார்.

இந்த நடமாடும் செயலகத்தில் மேற்படி பிரிவைச் சேர்ந்த பொதுமக்கள் தேசிய அடையாள அட்டைகள், புனர்வாழ்வு (சம்பந்தமான விண்ணப்பங்கள், பிறப்பு இறப்புத் திருமணப் பதிவுகள் பொதுசனமாதாந்த உதவிப்பண விண்ணப்பங்கள், ஜனசக்தி விவகாரம் மற்றும் முறைப்பாடு சம்பந்தமான பிரதேச செயலக வேலைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

தேசிய அடையாள அட்டைக்குப் படம் எடுப்பதற்கான ஒழுங்களும் செய்யப்பட்டுள்ளன.

# எமது படகு குப்புறக் கவிழ்ந்ததும் அலையினால் தூக்கி வீசப்பட்டேன்

## உயிர் தப்பிய மீனவர் தெரிவிப்பு

வடமராட்சி, ஜன. 19

கடற் கொந்தளிப்பில் சிக்கிய எமதுபடகு குப்புறக் கவிழ்ந்ததும் வேகமாக வந்த அலையினால் தூக்கி வீசப்பட்டேன். சிறிது நேரம் கடலில் தத்தளித்தபின் மற்றொருவரின் உதவியுடன் நீந்தத் தொடங்கினேன்.

— பருத்தித்துறைக் கடலில் கடும் கடற்கொந்தளிப்பில் சிக்கி உயிர்தப்பிய சுப்பர் மடத்தைச்சேர்ந்த சுப்பையா ரவி [வயது 30] என்ற மீனவர் இவ்வாறு உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

பருத்தித்துறைப் பகுதியிலிருந்து நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் சுமார் 20 படகுகளில் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றோம்.

இரவு 8மணியளவில் மழை பெய்ய ஆரம்பித்தது தொடர்ந்து கடும் காற்றும் வீசியது கடல் கொந்தளித்தது. இதனால் எமது படகுகள் அலைகளினால் அங்கும் இங்கும் அள்ளுண்டன.

நான் சென்றபடகில் என்னுடன் பலாலி, மயிலிட்டி ஆகிய இடங்களிலிருந்து இடம் பெயர்ந்த மற்றும் இருவரும் இருந்தனர்.

அலையினால் நீண்ட தூரம் அடித்துச் செல்லப்பட்ட நாம் செம்பியன்பற்றை அடைந்திருந்ததை நேற்றுக் காலை உணர்ந்தோம். அங்கிருந்து பெரும் சிரமத்துடன் படகை திருப்பினோம்.

பருத்தித்துறை துறைமுகத்துக்கு நேரே கரையிலிருந்து அரைமைல் தூரத்தில் எமது படகு வந்து கொண்டிருந்த போது கடும் அலையினால் எமது படகு கவிழ்ந்தது.

படகுகவிழ்ந்ததும் அலைகளுக்கு மத்தியில் சிக்கித்தவித்த நாம் மூவரும் ஒருவாறு கரையைநோக்கி நீந்த முயன்றோம் என்னுடன் வந்த இருவரும் சிரமப்பட்டு நீந்திக் கொண்டிருக்க நான் நீந்த முடியாது தத்தளித்துக் கொண்டிருந்தேன்.

இதனை கரையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த மீனவர்களில் ஒருவர் கயிறு ஒன்றுடன் நீந்திக் கொண்டு வந்து என்னிடம் கயிற்றைத் தந்தார் அந்தக் கயிற்றின் உதவியுடன் அவரைத் தொடர்ந்து நீந்தி வந்துகரை சேர்ந்தேன்.

படகு கவிழ்ந்த போது எனது தலையில் மோதியதால் காயம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

(ஐ-173)

# காணாமல் போன தமிழர்களின் விடயத்தில் புறக்கணிப்பு ஏன்?

## அமைச்சர் பீரிசிடம் கேள்வி

கொழும்பு, ஜன. 19

காணாமல் போனவர்கள் பற்றி விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுக்களை நியமித்த விவகாரத்தி(ல்) தமிழர்களைப் பற்றி — குறிப்பாக கிழக்கு மாகாணத்தில்காணாமல் போனவர்கள் பற்றி— அரசு அக்கறை காட்டவில்லை எனவும்—

1988க்குப் பின் காணாமல் போனவர்களைப் பற்றியே ஆணைக்குழு பரிசீலிக்க உள்ளது எனவும்—

இந்த விடயத்தில் 1983 ஆம் ஆண்டை ஏன் எடுத்திருக்கக்கூடாது எனவும்—

பி. பி. ஸி. செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி நீதி அமைச்சர் ஜி எல். பீரிசிடம் கேள்வி ஒன்றைக் கேட்டார்.

இக்கேள்விக்குப் பதில் அளித்த அமைச்சர்—

இது உபயோகமான விமர்சனம் அல்ல; நாங்கள் ஏதோ ஓர் இடத்தில் தொடங்க வேண்டும்! எமக்கு 3,000 மகஜர் கிடைத்துள்ளன! பின்னர் நாங்கள் ஆணைக்குழுவின் காலத்தை விஸ்தரிக்கலாம். இப்பொழுது ஆணைக்குழுவின் சுமையை அதிகரிக்க முடியாது — என்றார்

1983 இல் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற கலவரங்களில் பலநூற்றுக் கணக்கான தமிழர்கள் காணாமல் போனதும்—

அதற்குப் பின்னர் வந்த காலங்களில் ஸ்ரீலங்காவின் முப்படையினர் மற்றும் பொலீஸார் மேற்கொண்ட நடவடிக்கைகளால் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் காணாமல் போனதும் தெரிந்ததே. (உ-க)

## தீர்வுக்கான...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சென்று மீன்பிடிக்க அனுமதிக்கும் அதேவேளையில், கடற்படையினரின் பாதுகாப்பு நிலைமைகளை கவனத்தில் எடுத்துக் கொள்ளும் வகையில் ஓர் இணக்கத்துக்கு வர அரசு முயன்று வருகிறது

யாழ்ப்பாணத்துக்கான தரைப்பாதையைத் திறப்பது தொடர்பாக ஆனையிறவு வீதி, சங்குப்பிட்டிப் பாதை ஆகிய இரண்டையும் போக்குவரத்துக்கு திறந்து விட அரசாங்கம் ஆயத்தமாக இருக்கிறது.

பூநகரி இராணுவ முகாமை அகற்றினால் மாத்திரமே ஆனையிறவுப் பாதையை திறப்பதற்கு இடமளிக்கமுடியும் என்று விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதனை அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ள முடியாது எனினும் இந்தப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முடியும் என அரசு நம்புகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ள 4 ஆயிரம் கோடி ரூபா செலவிலான திட்டம் ஒன்று அமுல் செய்யப்படவிருக்கிறது

இதற்கு தேவையான நிதியில் பெரும்பகுதி வெளிநாடுகளில் இருந்து பெற்றுக் கொள்ளப்படும்.

சுமுகநிலை ஏற்பட்டதும் அரசாங்கம் இந்த திட்டத்தை முழுமையாக அமுல் செய்யும்.

விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையிலான அடுத்த கட்ட பேச்சுக்களுக்கான திகதிகள் விரைவில் அறிவிக்கப்படும்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளும் கூடிய விரைவில் ஆரம்பிக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் அங்கு தெரிவித்தார்.

(உ-3)

## பிரதேச...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளார்,

தற்போதைய சமாதான நடவடிக்கைகள் கட்டம் கட்டமாக முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் என விடுதலைப் புலிகள் எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார்.

ஆரம்ப கட்டப் பேச்சுக்களில் யாழ்ப்பாண மக்கள் எதிர்நோக்கியுள்ள உடனடியான அவசரப் பிரச்சனைகள் பற்றி ஆராய வேண்டும் என விடுதலைப் புலிகள் ஆரம்பத்தில் இருந்து வலியுறுத்தி வந்ததாக அவர் கூறினார்.

''பேச்சுவார்த்தைகளுக்கு நாம் எந்த விதமான முன் நிபந்தனைகளையும் விதிக்கவில்லை; அரசியல் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு விடுதலைப் புலிகள் விரும்பவில்லை என்று தெரிவிக்கும் கருத்துக்களில் எந்த விதமான உண்மையும்இல்லை என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதி சமாதானத்தில் உறுதியாக இருப்பதால் நல்ல பலாபலன்கள் கிடைக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

கடந்த காலத்தில் இருந்த அரசாங்கங்கள் பேரினவாத கொள்கையை கடைப்பிடித்தன; பிரச்சினைக்கு தீர்வு காண இராணுவ அணுகுமுறைகளை பின்பற்றின.

புதிய அரசாங்கம் அரசியல் தீர்வுக்கு முன்னுரிமை கொடுக்கின்றது. அவர்கள் சமாதானத்தில் உறுதியாக இருக்கின்றார்கள்; பிரச்சினைக்கு தீர்வு காண உண்மையான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

எனவே தற்போதைய அரசாங்கத்தின் தலைமையில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படமுடியும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டிருக்கிறோம் — என்று அவர் தெரிவித்தார் என அச்செய்தியில் கூறப்பட்டது.

(உ-3)


யாழ். மாவட்ட
மெய்வன்மை வீரர்களுக்கு
திறமையை வெளிப்படுத்த
ஓர் அரிய சந்தர்ப்பம்!

JAFFNA DISTRICT A.A.A.

விண்ணப்பிக்க கடைசித் தினம் நாளை!

யாழ். மாவட்ட
அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்
யாழ். றோட்டறிக் கழகத்தின்
ஆதரவுடன் நடத்தும்
மாவட்ட மெய்வல்லுநர் போட்டிகள்
பெப்ரவரி முதல் வாரத்தில்!

விண்ணப்பப் படிவங்களைப் பெற:

* சண். தயாளன் (யாழ். இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்)
* கே. டபிள்யூ. விமலராஜன் (மாவட்ட விளையாட்டு அதிகாரி, யாழ். செயலகம்)
* சொ. விஜயராஜா (சொக்கன்) (ஐயனார் கலட்டி, பருத்தித்துறை.)
* ஜே. எஸ். ரி. புத்தக நிலையம் (பழைய நீதிமன்றம் முன்பாக) கண்டி வீதி, சாவகச்சேரி.
* உதயன் சேவை நிலையம் கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

விண்ணப்ப முடிவு திகதி; 20-01-1995

(சி-300)

செயலாளர்,
யா. மா. அ. மெ. ச.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை ... யாழ்ப்பாணம் ... வீதி, 1,93/1 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 19-01-1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது